முகப்பு:

திருக்குட நீராட்டுவிழா கண்ட
குன்றத்தூர் அருள்மிகு
தெய்வச் சேக்கிழார் ஆலயம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2020 சுக்கில ஆண்டு ஆவணி | மணி |
| --- | --- | --- |
| 31 | ஆகஸ்ட் 1989 விலை ரூ. 3-00 | 8 |


திருக்கோயில வாசகர்களுக்கு

அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
| --- | --- | --- | --- |
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

பொருளடக்கம்

காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே —பண்டித நடேசனார்

திருவெண்காட்டுநங்கையார் —பேராசிரியர் த. அகரமுதல்வன்

கந்தவேள் கருணை —திருமுருக கிருபானந்தவாரியார்

கல்யாண சுந்தரமூர்த்தி —ஸ்ரீதரன் எம். ஏ.

பிரதோஷ மகிமை —கனகசுப்பிரமணியம்

நெறிநின்ற அருள் வாழ்வு —மா. குப்புசாமி

தீயும் தீவினையும் —தவத்திரு குன்றக்குடி அடிகள்

சித்திரபாரதம் —செவ்வேள்

நரசிங்கத்தைப் பிணித்த பக்தர் —டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

திருப்புட்குழி —கு. தாமோதரன் எம். ஏ.

சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகை

உண்மையால் உயர்ந்த உத்தமர் —வே. தியாகராஜன்


இந்துமத இணைப்பு விளக்கம் - வினா விடை நூல் —நிறைமதி

கம்பரின் இராமாவதாரம். —டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே..!



பண்டித நடேசனார்

உலகம் சுற்ற எண்ணினான் குபேரன். கயிலாயம் சென்றான். சிவபெருமானையும் உமாதேவியாரையும் அழைத்துக்கொண்டு திவ்வியத் தலங்களைக்காணப் புறப்பட்டான். காவிரி புகும் பட்டினத்தையும் திருவெண்காட்டையும் அடைந்தான். பூம்புகார் குபேரனது மனத்தைக் கவர்ந்தது. இதையறிந்த கயிலாசபதி, ''குபேரனே! இந்நகரை விரும்பினாய், இங்கு பிறப்பாயாக'' என்றார். தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டினன் குபேரன். இறைவன் இசைந்து கயிலைக்கு எழுந்தருளினார்.

சிவனதாணைப்படி குபேரன் காவிரிபுகும் பட்டினத்தில் சிவநேச செட்டியாருக்கும் ஞானகலைக்கும் பிறந்தான். சுவேதாரண்யர் (திருவெண்காடர்) எனும் பிள்ளைத் திருநாமம் ஏற்றான். ஐந்தாண்டளவில் தன் தந்தையை இழந்தான். குருவருளால் கலைகள் யாவும் கற்றான். திருவெண்காட்டிலுள்ள சுவேதாரண்யமூர்த்தியைத் திருவோண நட்சத்திரத்தில் அபிஷேகம் செய்யச் சென்றான். தேவாலயத்தில் ஞானசிரியர்ஒருவரால் சிவ தீட்சை செய்யப்பட்டுத் தங்கப் பெட்டியிலுள்ள ஸ்படிக லிங்கத்தைப் பெற்றான். குருவாணைப்படி தினமும் சிவலிங்க பூஜை செய்து மகேஸ்வர பூஜையும் செய்து வந்தான். தன்னிடமிருந்த செல்வமெல்லாம் செலவழிந்தது. வருந்தினான். சிவனார் திருவெண்காடர் கனவில் தோன்றி ''நாளையே உன் வீட்டில் பணம் கிடைக்கும்'' என்றார். அது போல் செல்வம் கிடைத்தது. முட்டின்றி அரன் பூசையும் வளர்ந்தது. வந்த பணத்தில் பெருத்ததால் சுவேதாரண்யரைப் பட்டினத்துச் செட்டியார் என்றும் பட்டினத்தார் என்றும் நகரத்தார் அழைத்தனர். பட்டினத்தார் சிவகலையை மணந்து நல்லறமாகிய இல்லறம் இனிது நடத்தினார். தமக்கு முப்பதாண்டாகியும். மகப்பேறு இல்லாததற்கு மனம் வருந்தினார் பட்டினத்தார். விரதங்களையனுசரித்துத் திருவிடைமருதூருக்குச் சென்று ஈசனை வேண்டினார். தவத்தால் பெறும் பிள்ளையே நற்பிள்ளையாம், அப்பிள்ளையே தன் பெற்றோரைக் காக்கும்.

திருவிடைமருதூரில் மகாலிங்கத்தையும் பெருந்தன நாயகியையும் பூசிக்கும் சிவசருமர் வறுமையால் வாடினார். அவர்தம் தர்மபத்தினி, சுசீலையும் தன்னால் ஆனவைகளைச் செய்து ஒழுகினாள். இவ்விருவரையும் சோதிக்க இறைவனே ஒருநாள் சிவசருமர் வீட்டிற்கு வந்தார். மிகப் பசியால் வாடுவார் போலத் தோற்றமளித்து அன்று நீவேதனமாக விருந்தைத்தாமே உண்டு களித்தார்; உடனே மறைந்தார்.

மறைந்தவர் மருதூர் பெருமானே என்றுணர்ந்து தம் மனைவியின் திருமாங்கல்யத்தை விற்றுப் பண்டங்கள் வாங்கி அடியார் பசிப்பிணிக்கு மருத்துவரானார் சிவசருமர். மறுநாளும் மருதவாணர் சிவசருமரைக் காருண்யாமிர்தக்கரையில் சந்தித்து அவரளித்த அமுதினை உண்டார். ''சிவசருமரே, வீட்டில் காத்திருக்கும் அடியார்க்ளைஉண்பிக்க விரைந்து செல்க'' என்றார் சிவனார். சிவசருமர் வீடு திரும்பு முன்னர் சிவனருளால் மகேஸ்வர பூஜைக்குரியன யாவும் இருந்தன. சுசீலையால் உண்மையை உணர்ந்தார் சிவசருமர், ஆனந்தம் கொண்டார். வழக்கம் போல் அடியார்களோடு அமுதுண்டு நித்திரையுற்றார். விடியற் காலையில் சிவசருமர் சுசீலை இருவருடைய கனவிலும் சிவனார் தோன்றிப் ''பொருளில்லை என வருந்தவேண்டா, தீர்த்தக் கரையிலுள்ள கீழண்டை வில்வ மரத்தடியில் யாமே ஒரு மகவாகத் தங்குவோம். எம்மைக் கொண்டு போய் திருவெண்காடருக்கு விற்றுப் பொன் பெறுக. அவன் குழந்தையின் எடைக்குப் பொன்தருவான், அப்பொன்னைவிற்று வறுமையை ஒழித்துவாழ்வீராக'' என்றார். ''சிவனை விற்றா நாங்கள் வாழவேண்டும்'' என வருந்துகையில் ''குபேரனே திருவெண்காடனாகப் பிறந்து வாழ்கின்றான். அவனைத் தடுத்தாட்கொள்ள வேண்டினான். அதற்கு இசைந்தகாரணத்தால் இன்று அவனுக்கு மகவாகத் தோன்றி அவனது பிறவித் துன்பம் போக்குகின்றோம், வருந்தற்க'' என்றார் மருதப்பர்.

சொல்லிய வண்ணம் செய்யும் பெருமான் திருவருளால் திருவளர் மகவினைக் சுசீலையும் சிவசருமரும் கண்டார்கள். ''மகவினை எடைபோட்டு அதனளவு பொன் தருக'' என்று சிவகலைக்கும் சுவேதாரண்யர்க்கும் கனவில் தோன்றிக் கூறியபடியால் மகவினை வாங்க வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார் பட்டினத்துச் செட்டியார். ஆதி சைவ அந்தணர்களாகிய சிவசருமரும் சுசீலையும் மருதவாணராகிய மகவினைச் செட்டியார் கையில் கொடுத்தார்கள். துலையிட்டுப் பொன்னைச் சரியெடையாக மகவு தந்தார்க்குக் கொடுத்தார்கள்.

நல்ல நாளில் குழந்தையைத் தொட்டில் இட்டு நாமகரணம் செய்தனர். மகனின் பெயர் மருதவாணன் என்றாயிற்று. மருதவாணன் நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக



# சிலை திருட்டைத் தடுக்கத் தனிச் சட்டம்

தமிழ்நாட்டில் சிலை திருட்டுக்களைத் தடுப்ப தற்கு அம்மாதிரி திருட்டுக்களில் ஈடுபடுவோர்களையும் துணை நிற்போர்களையும் சிறைக் காவலில் வைக்க தனியான ஒரு தடுப்புக் காவல் சட்டத்தை நிறைவேற்றுவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டத்தின்படி ஒரு ஆண்டுவரை தடுப்புக்காவலில் வைக்க இடமிருக்கும். இச்சட்டம் மத்திய அரசு அங்கீகாரம் பெற்று கொண்டுவரப் படும்.

—மாண்புமிகு தமிழக முதல்வர்

**டாக்டர் கலைஞர் அவர்கள்**

வளர்ந்தார். ஒரு நாள் சிறுவர்களோடு கடற்கரை சென்று நீராடிக்கொண்டிருந்தான் மருதவாணன். அவ்வமயம் ஒரு பெரிய மீன் ஒரு சிறுவனை விழுங்கியது. அம்மீனைத் தன் சிறு காலால் உதைத்தான். மீன் சிறுவனைக் கக்கிவிட்டு இறந்தது. சிந்து முனிவர் சாபத்தால் மீனாகவிருந்த மணிபத்திரனாகிய கந்தருவன் மருதவாணனை வணங்கித் தன்ஊருக்கு விடைபெற்றான். மீன்வயிற்றிலிருந்த இரத்தின மூட்டையுடன் வீடு திரும்பினார் மருதவாணர். மற்றொரு நாள் தன் தந்தையிடம் ஒருவர் மதிப்பிடக் கொடுத்த முத்திலுள்ள குற்றங்களை கூறி அவரும் தந்தையும் ஐயப்பட, அம்முத்தையே உடைத்துக் குற்றங்களை நிருபித்து, அம்முத்து வியாபாரி வருந்தா வண்ணம் பதினாயிரம் வராகன் கொடுத்தனுப்பினான் மருதவாணன்.

தன் பதினாறாவது வயதில் தந்தை உத்தரவு பெற்று திரை கடலோடித் திரவியஞ் சேர்க்க, கப்பலேறிப் புறப்பட்டார். மற்றவர்கள் எல்லோரும் தமக்கே பொருளீட்டும்போது, மருதவாணர் தாம் பெற்ற செல்வத்தால் போன இடங்களில் கோயில் குளம் தொட்டார். அடியார்களுக்கு அன்னம் படைத்தார். வறிஞர்களைப் பணக்காரர்களாக்கினார்.

மருதவாணன் எருமுட்டை(விறட்டி)களையும் தவிட்டு முட்டைகளையும் கப்பலில் ஏற்றி வைத்தார். மற்றவியாபாரிகள் நகைத்தார்கள். யாவரும் கடலில் பிரயாணம் செய்கையில் கடல் கொந்தளித்தது. நளிர் குளிரால் நடுங்கிய வணிகர்கள், மருதவாணரைத் தஞ்சம் புகுந்தனர். மருதவாணர் இறைவரே அன்றோ! இயற்கையின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தினார்.

மழையும் கடும்புயலும் நின்றதால் காவேரிப் பூம்பட்டினத்தையடைந்தனர். வியாபாரிகளில் ஒருவன் ''மருதப்பர் பைத்தியக்காரனாகி விட்டார். அவர் தவிடும் விறட்டியும் வாங்கி வந்தார்'' எனத் திருவெண்காடரிடம்கூறினான். அவர்ஓடோடிவந்து மகனையும் மூட்டைகளையும் பார்த்தார். திடுக்கிட்டார். மகனுக்கு மெய்யாலும் பித்துப் பிடித்ததோ எனக் கலங்கினார்., அவர் மூட்டைகளைக் கொட்ட தவிடு பொன் மணலாகவும் விறட்டி நவமணிகளாகவும் இருக்கக் கண்டார். அதிசயித்து வீடு திரும்பினார். தன் மகன் மாயமாய் மறைந்ததை அறிந்தார். மருதவாணர் திருவிடைமருதூர் சென்று ஆங்கிருந்த சிவசருமரையும் சுசீலையையும் தம் சோதியுள் ஐக்கியமாக்கிக் கோயிலிலுள்ள மூல மகாலிங்கத்துள் மறைந்தார்.

மகனது பிரிவினால் திருவெண்காடர் வருந்துகையில் அவர்தம் மனைவி, சிவகலை ஒரு பெட்டியைத் திருவெண்காடரிடம் கொடுத்தார். அப்பெட்டியிலிருந்த ஒரு ஓலையை எடுத்தார். உற்று நோக்கினார். ''காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே'' எனஅதில்எழுதியிருப்பதைப்படித்தார். ஞானமுற்றார். ஒரு நொடியில் குபேர சம்பத்தைத் துறந்து துறவியானார். தாயிடஞ் சென்றார். அன்னை ''நமக்காக இருக்க'' என்றார். தாய்க்கு ஈமக் கடன் செய்து விட்டு பிறகு வெளியூர் செல்லல் எனத் தீர்மானித்தார் பட்டினத்தார். தமது பொருட் காப்பாளராகிய சேந்தனாரை அழைத்துத் தம் பொருளைத் தர்மம் செய்து விடு



மாறு உத்தரவிட்டார். பற்றற்றவரானார் பட்டினத்தார். அடியார் பக்தியிலும் அரன் பூசையிலும் தம் மனைவியரை இருக்கப் பணித்தார்.

''மாடு உண்டு, கன்று உண்டு, மக்கள்
உண்டு என்று மகிழ்வது எல்லாம்
கேடு உண்டு எனும்படிக் கேட்டு
விட்டோம் இனிக்கேள் மனமே !
ஓடு உண்டு கந்தை உண்டு, உள்ளே
எழுத்து ஐந்தும் ஓத உண்டு
தோடு உண்ட கண்டன் அடியார் நமக்குத்
துணையும் உண்டே.''

மேலுள்ள பாடல்களைக் கூறிவிட்டு மௌனம் எய்தினார். பாக்களைக் கேட்டவர் வெட்கித் தலை குனிந்தனர். பட்டினத்தாரின் பெருந்தனைத்தையும் பெருந்தானத்தையும் கேள்விப்பட்ட அவ்வூர் மன்னன் சேந்தனாரையண்டி, மீதி நிதியைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே, மன்னன் சேந்தனாரைச் சிறைப்படுத்தினான். பட்டினத்தாரைக் கண்டு, ''பணமெல்லாம் சூறையிட்டுத் தவக்கோலம் கொண்டீரே, நீர் அடைந்துள்ள பயன்யாது'' என்றான். ''நீர் நிற்க, நாம் இருக்க'' (நீர் உலக விவகாரங்களில் இருக்க, நான் முத்தி நிலையில் நிற்கிறேன். இது இறைவன் ஆணை) என்றார் பட்டினத்தார். துறவிக்கு வேந்தன் துரும்பு அன்றோ? அறம் மறத்தோடு மருவாது அல்லவா? கோமகன் வெட்கித் தலை குனிந்தான். அரசன் அகன்ற பின் பட்டினத்தடிகள் பசி மிகுதியால் வீடுதோறும் பிச்சை கேட்கச் சென்றார்.

இவரது நிலையறியாச் சுற்றத்தார் பிச்சையிடுவதையும் நிறுத்தினர். தம் குலத்துக்கு அவமானம் கொண்டு வருகின்றார் பட்டினத்தார். எனத் தூற்றிப் பேசவும் தொடங்கினர். பித்தன் எனவும் தலைப்பட்டனர். ஆனால் ஞானியாகிய பட்டினத்தார் ''குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைப்போம்'' என்று சொல்லிக் கொண்டே திரிந்தார். இதனைச் செவியுற்ற தமக்கையார் பொறாராகி விஷம் கலந்த அப்பம் கொடுத்தார். அதனையறிந்த அடிகளார். ''தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்று கூறித் தமக்கையார் வீட்டு இறப்பில் செருகினார். அவ்வீடு எரிந்து ஊரையும் அழித்தது. ஆனால் உயிர் சேதமில்லை.

குடி இருந்த மனைக்குத் தீ வைக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு பட்டினத்தார் திருவெண்காட்டில். திரிந்து கொண்டு இருந்தார். தாயார் சிவனடி நீழலையடையக் காலமானதைத் தெரிந்து நேரே காவிரிப்பூம்பட்டினம் சென்றார். உறவினர் தம்தாயாரைச் சுடுகாட்டிற்குக்கொண்டு வருதலைக் கண்டார். அருகு சென்றார். உறவினர் எல்லோரும் ஒதுங்கினர். ஈரமான வாழைப் பட்டைகளால் சிதையடுக்கி அதன் மேல் தாயுடலைக் கிடத்தித் தாயன்பு நினைத்துப் பாடிப் புலம்பினார் கொள்ளியிட நினைத்துக் கீழுள்ள பாட்டினைப் பாடினார்.

''முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே''.

என்று பாடவும் அவரது ஞானாக்கினியால் சிதை எரிந்தது. தாயுடல் தகனமாயிற்று.

திருவிடைமருதூரை நினைத்துப் புறப்பட்டார். வழியெல்லாம் மருதப்பனைப் பாடிக் கொண்டே சென்றார். பட்டினத்தார் வரவினை

எதிர்பார்த்திருந்த சிவனடியார்கள் அவரை அழைத்துக் கொண்டு ஆலயம் அடைந்தார்கள். மருதப்பரைத் தரிசனம் செய்கையில் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையைப் பாடினார்.

கோபுர வாசற்படியிலேயே குடியிருந்தார். பிச்சையேற்றுண்டு சிவயோகத்திலிருந்தார். முற்றும் துறந்தவர் என்பதற்கறிகுறியே பிச்சை எடுத்தல். ஆணவத்தை ஒழிக்கவே ஞானிகள் பிச்சை ஏற்றனர்.

ஒருநாள் சிவன் பட்டினத்தார் கனவில் தோன்றி ''நீயார்'' என வினவினார், ''நான் என்பது மாமிசம் தோல், நரம்பு, எலும்பு, உரோமம், உயிர்ப்பு முதலியவற்றில் எது என்று அறியேன். இறைவன் மறைந்தான். சுவாமிகள் சுவாமி நின்ற அடிச் சுவட்டைக் கண்ணிலும் மார்பிலும் ஒற்றித் துதித்தார்கள். மற்றொரு நாள் குடிக்க குடி நீர் கிடைக்காததால், அதனைப் பாடிப் பெற்றார். கருப்பங்கழியில் படுத்துறங்குகையில் இறைவன் தோனறி, ''வெண்காடா! சிவத்தலந்தோறும் சென்று பாடுக'' என்றார். அவ்வாறே பட்டினத்தார் செய்தார்.

திருவாரூரில் திருவெண்காடர் இருக்கையில் ஒரு சிறுவன் அவருக்குப் பணி புரிந்தான. ''பேய் கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ளக் கூடாது'' எனும் பழமொழியை நம்பிய அச்சிறுவனைத் தேற்றி திருமணம் செய்து கொள்ளச் செய்து, வாழ்த்தினார். அவனை வாழ்த்துகையில் பாடிய பாட்டே இது.

''நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகை அறியீர், கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பு அதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர், கிடந்து உழல அகப்பட்டீரே''

இதனைப் பாடிய பின்னரே சேஷமிட்டனர் என்ப. ஒருநாள் இம்மணமகன் நல்லெண்ணெய் ஸ்நானம் செய்து விட்டுத் தம் மனைவியுடன் கலக்க, சன்னி கண்டுமரணமடைந்தான். பட்டினத்தார் தாமாகவே அவ்விடம் வந்தார். பாடினார். இறந்த அவ்வாலிபன் உயிர் பெற்று எழுந்தான். ஊரார் அதிசயித்தனர். பாண்டிய நாடு சென்றார் பட்டினத்தார். திருவால வாயி லுள்ள ஏகலிங்கத்தைப் பாடிதுதித்தார். சேரநாடு திருவஞ்சைக்களம் பணிந்து கொங்குநாடு சேர்ந்தார். பேரையூர் (பேரூர்) அவிநாசியப்பரை வணங்கினார்.

உஞ்சேனை மாகாளம் எனுமிடத்திலுள்ள விநாயகரண்டை சிவஞான நிட்டையிலிருந்தார் பட்டினத்தார். அவ்விநாயகரை வணங்கிச் சென்ற கள்வர்கள் தங்கள் பொருட்களில் விலையுயர்ந்த நவரத்தின மாலையை இருட்டில் உட்கார்ந்திருந்த பட்டினத்தார் கழுத்திலிட்டுச் சென்றார்கள். அரண்மனைச் சேவகர் அம்மாலையைக் கண்டு பட்டினத்தாரைத்''திருடர்''எனக்கூட்டிக்கொண்டு போய் அவ்வூர் அரசனாகிய பத்திரகிரி மகாராஜாவிடம் நிறுத்தினர். அவன் அவரைக் கழுவேற்றச் சொன்னான். கழுமரம் முன்னர் நின்று இறைவன் திருவருளை நினைந்து பாடினார்.

''என் செயல் ஆவது யாது ஒன்றும் இல்லை
இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன்
இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாது ஒன்றும் இல்லை
பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து
மூண்டதுவே''

என்று பாடியவுடனே கழுமரம் தீப்பற்றி எரிந்தது: பத்திரகிரி மகாராஜா பட்டினத்தாரின் காலில் விழுந்து, தம்மை மன்னித்துச் சீடனாக்கிக் கொள்ள வேண்டினார். அரசன் ஆண்டி ஆனான். திருவிடை மருதூரில் தங்கிப் பத்திரகிரியார் சிவயோகம் பயின்றார். பட்டினத்தார் அருளையும் பெற்றார். வடநாட்டுச் சிவஸ்தலங்களைத் தரிசித்துவிட்டுத் திருக்குற்றாலம் வந்தார். குற்றால நாதரைக் கண்டு பாடினார்.

இராமேச்சுவரம்,வேதாரண்யம் முதலிய சேத்திரங்களைக் கண்டு வணங்கித் திருவிடைமருதூரில் கிழைக்கோபுர வாசலில் வீற்றிருந்தார். பத்திரகிரியார் மேலைக் கோபுர வாயிலில் தங்கினார். நன்றியுள்ள நாய் ஒன்று பத்திரகிரியாரிடம் வளர்ந்தது. ஒருநாள் மருதீசர் கிழவர் போன்று பட்டினத்தாரிடம் வந்து பசிக்கு அன்னம் கேட்டார். மேலைக் கோபுரத்துப் போய் கேட்கும்படி வேண்டினார். பிட்சாபாத்திரமே தம்மைச் சம்சாரியாக்கி விட்டது என உணர்ந்து அதை வீசியெறிந்தார்; வீசிய ஓடு நாய்மேற்பட்டது. உடனே நாய் இறந்து மறுபிறவி எடுத்து காசி ராஜனுக்கு மகளாகப் பிறந்தது. மங்கை பருவமுற்றவுடன் அந்நாய்ப் பெண் பத்திரகிரியாரைத் தரிசிக்க வந்தாள். 'நாயடியாள் நம்மை நாடி வந்துள்ளாள்' எனப் பட்டினத்தாரிடம் பத்திரகிரியார் கூறினார். அவளை மருதவாணரை வணங்குமாறு கூறினார் பட்டினத்தார். அப்பெண்ணும் பத்திரகிரியாரும் ஜோதியிற் கலந்தார்கள். தாம் ஜோதியிற் கலக்காதிருப்பதை நினைத்து மனமுருகி மருதீசரை வணங்கினார். மருதீசரும் ''உனக்குப் பேய்க் கரும்பு தித்திக்கும் இடமே முத்தி'' எனப் பணித்தார்.

வழியில் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவொற்றியூரை அடைந்தார் பட்டினத்தார். திருவொற்றியூர் அவருக்குச் சிவலோகம் போல் தோன்றியதால் பாடி மகிழ்ந்தார்.

திருவொற்றியூரில் தங்கியபோது சுவாமிகள் பசு மேய்க்கும் சிறுவர்களுடன் விளையாடுவதே தம் வழக்கமாகக் கொண்டார். ஒரு நாள் பேய்க் கரும்பினைக் கடித்துச் சுவைத்தார். அது இனித்தது.

இடைச்சிறார்கள் சுவாமிகள் சொல்லிய வண்ணம் மணற்குவியலில் உட்கார்ந்ததும் சாலைக் கொண்டு அவரை மூடினர். திறந்தனர். சுவாமிகள் அவர்களுக்கு அங்கிருந்த மணலைக் கையில் கொடுத்ததும் அம்மணல் சர்க்கரையாக மாறியது. கற்கள் கடலையாக மாறின. சிறுவர்கள் மகிழ்ந்துண்டார்கள். ஆடி மாதம் பௌர்ணமியன்று இடைச் சிறுவர் சாலை மூடித்திறந்ததும் பட்டினத்தார் சிவலிங்க வடிவமாக வீற்றிருப்பதைக் கண்டு ஓடோடி ஊரார்க்குத் தெரிவித்தனர். உலகமே திரண்டு தரிசித்தது. பட்டினத்தார் வரலாற்றினையும் பாடல்களையும் படிக்கின்றவர்கள் சகல சம்பத்தும் (ஆயுள், செல்வம், குழந்தைகள், சிவஞானம்) அடைவார்கள் என்பது உண்மை. மறுமையில் சிவபதமும் கிடைக்கும்.

# திருவெண்காட்டு நங்கையார்

பேராசிரியர் த. அகரமுதல்வன்

ஒரு தாய், தன் குழந்தைக்காக எதையும் இழக்கத் துணிவாள். ஆனால் எதற்காகவும் தன் குழந்தையை இழக்கத் துணியமாட்டாள். 'பெறுகின்ற எல்லாப் பேறுகளிலும் மக்கட் பேற்றினையொத்த பேறு ஒன்றினை யான் அறியேன்' என்று திருவள்ளுவர் கூறுவார்.

''பெறுமவற்றுள் யாமறிவது ஒன்றில்லை
அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற''

அந்த அரிய பேற்றினை - தம் மகனைத் தம் கணவரின் இலட்சியம் ஈடேறவேண்டி இழக்கச் சம்மதித்தார் திருவெண்காட்டு நங்கை எனும் சிறுத்தொண்டரின் மனைவியார்.

அடியார் தொண்டில் அயராது ஈடுபட்டு வந்தவர் பல்லவனின் படைத்தலைவராய் இருந்து பின் சிறுத்தொண்டரான பரஞ்சோதியார். அடியாருக்கு உணவிட்டபின்னே தானுண்ணும் அருந்தொண்டாற்றிய அவரைத் திருஞான சம்பந்தரும் பாராட்டினார். சிறுத்தொண்டரின் மெய்யன்பை நுகர்ந்தருள் செய்வதற்குத் திருவுளங்கொண்ட சிவபெருமான், வடநாட்டு அடியார் வடிவேற்று வைரவராய்த் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார். சிறுத்தொண்டரின் வீட்டு வாயிலில் நின்று, சிறுத்தொண்டர் வீட்டில் உள்ளாரா? என்று வினவினார்.

அன்றும் வழக்கம்போல் உணவு படைக்க வேண்டி, ஓர் அடியாரைத் தேடி வெளியில் சென்றிருந்தார் சிறுத்தொண்டர். எனவே அவ்வீட்டுத் தாதியார் சந்தன நங்கையார், வந்துநின்ற அடியாரை வணங்கி, நாயனார் வெளியில் சென்றிருப்பதைச் சொல்லி வீட்டில் வந்திருக்குமாறு அவரை வேண்டினார். ஆனால் அடியவரோ ''மாதர் தனித்திருக்கும் வீட்டில் நாம் இருக்க மாட்டோம்'' என்று சொன்னார்.

அதனை வீட்டின் உள்ளிருந்து கேட்ட வெண்காட்டு நங்கையார், அடியவர் சென்றுவிடுவாரோ என்று அஞ்சி, விரைந்து வெளியே வந்து,

''அம்பலவர் அடியாரை அமுது
செய்விப்பார் இற்றைக்கு
எம்பெருமான் யாவரையும்
கண்டிலர் தேடிப்போனார்
வம்பெனநீர் எழுந்தருளி
வந்த திரு வேடங்கண்டால்
தம்பெரிய பேறென்றே
மிக மகிழ்வார், இனித் தாழா''

''இப்பொழுதே வந்தணைவர்
எழுந்தருளி இரும்....''

என்று அமுதமாக மொழிந்தார்.

அடியவரோ, ''கணபதீச்சரத்தின்கண் ஆத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம். அவர் வந்ததும் தெரிவியுங்கள்'' என்று சொல்லிச் சென்றார்.

நாயனார், அடியார் ஒருவரையும் காணாமையால் வீடு திரும்பி வருந்தினார். அவரிடம் நங்கையார், அங்கு வந்து சென்ற அடியவரைப் பற்றிக் கூற, உடனே நாயனார் ''உய்ந்தேன், உய்ந்தேன், அவர் எங்குள்ளார்?'' என வினாவினார்.


அம்மையார், அடியாரைப்பற்றி,

''வடிசேர் சூல கபாலத்தார்
வடதேசத்தோம்' என்றார் வண்
துடிசேர் கரத்துப் பயிரவர் யாம்
சொல்ல இங்கும் இராதே போய்க்
கடிசேர் திருவாத்தியின் நிழற்கீழ்
இருந்தார் கணபதீச்சரத்து''

என்று நிரல்படக் கூறினார்.

அம்மையார், அடியவரிடம் மொழிந்த சொற்களும், தம் கணவரிடம் கூறிய சொற்களும் அவர் கூரிய மதியுடையவர் என்பதையும் நயமான நாவன்மையுடையவர் என்பதையும் காட்டுவன. நாயனார் அடியவரை எளிதிற் கண்டறியும் பொருட்டு ''அடியார் சூலம் உடையவர், காபாலம் தரித்திருந்தார், துடி உடையவர், வைரவக்கோலம் உடையவர்'' என்று சொன்னார். ''அவரை இங்கு இருக்குமாறு ஏன் நீ சொல்லவில்லை?'' என்று நாயனார் கேட்கலாம் என்றுணர்ந்து, ''யாங்கள் சொல்லவும் அவர் இங்கு இராதுபோனார்'' என்றும் கூறினார். மேலும் வைரவர் இருக்கும் இடத்தையும் நாயனார் எளிதில் அறியும் வண்ணம் அடையாளத்துடன் கூறினார். இவ்வாறு நங்கையார் நிரல்படக் கூறிய திறம் போற்றுதற்குரியது.

நங்கையார் கூறியவாறே, நாயனார் வைரவ அடியாரை அணுகித்தொழுது, அமுதுண்ண அழைத்தார். வைரவரோ, ''எமக்கு உணவிட உம்மால் முடியாது'' என்றார். அதற்கு நாயனார், ''தாங்கள் விரும்பியபடி படைப்பேன்'' என்றார் வைரவர். ''நாம் ஆறு மாதங்கட்கு ஒருமுறை பசுக்கறி உண்போம். அதற்குரிய நாள் இன்று தான், ஊட்ட உம்மால் இயலாது'' என்றார். நாயனார், ''அரிதன்று, உமக்கு உணவாம் பசு இன்னதெனக் கூறுங்கள்'' என்றார். ''நாம் உன்பது நரப்பசு.



அதுவும் ஐந்து வயதிற்குட்பட்டதாயும், உறுப்பில் ஒருகுறையும் இல்லாததாயும் இருக்க வேண்டும். நாம் மேலும் சொல்வது உமக்கு வருத்தத்தைத் தரலாம்'' என்று வைரவர் கூறினார். ''தாங்கள் சொல்லி அருளுங்கள்'' என்று நாயனார் வேண்டினார். வைரவர் ''ஒரு குடிக்கு ஒரு மகனைத் தந்தை அரியத் தாய் பிடிக்கும்போது தம்மில் மனமுவந்து குற்றமின்றி அமைந்த கறியினையே யாம் உண்போம்'' என்றார். அதைக்கேட்ட நாயனார் ''தாங்கள் அமுது செய்வதாயின் அடியேனுக்கு இதுவும் அரிதன்று'' என்று கூறி வீட்டிற்கு விரைந்தார்.

'அன்புமிக்க பெருங் கற்பின் அணங்கு திருவெண்காட்டு அம்மை'' சிறுத்தொண்டர் வரவு நோக்கி நின்றிருந்தார். கணவரின் மலர்ந்த முகங் கண்டு வணங்கி அடியாரைப்பற்றி வினாவினார். வள்ளலாகிய நாயனார் அடியார் கூறியவற்றைக் கூறினார். அதற்கு நங்கையார், ''அவர்க்கு உரிய வகையில் அமுது படைப்போம். ஒரு குடிக்கு ஒருவனான சிறுவனைப் பெறுவது எவ்வாறு?'' என்று கேட்டார். நாயனார், ''நிறைய நிதி கொடுத்தால் குழந்தையைத் தருவார் இருக்கலாம். ஆனால் தம் குழந்தையைத் தாமே அரிந்து தரக்கூடியதாய் தந்தையார் எங்கும் இருக்க மாட்டார்களே, ஆதலினால், யான் உய்வடையவேண்டும் எனில் நீ பெற்ற மகனை ஈண்டு அழைப்போம்'' என்றார்.

அதைக்கேட்ட நங்கையார் திடுக்கிட்டு ஒரு கணம் சிந்தித்து இருக்க வேண்டும். அவர் நெஞ்சில் கணவரா? குழந்தையா? என்ற கேள்வி எழுந்திருக்கலாம். 'யான் உய்யவேண்டுமெனில்' என்று நாயனார் கூறியது அவர் நெஞ்சில் சுழன்றது போலும். தான் கொண்ட கொள்கையை நிறைவேற்ற இயலாதாயின், நாயனார் இறந்துபடுவார் என்பதை நங்கையார் நன்கு அறிவார். எனவே, காலம் தாழ்த்தாது நங்கையார் அதற்கு இசைந்தார். மேலும் நாயனார் இறந்துபடுவரேல் தானும் உடன் உயிர் நீக்கும் உறுதி உடையவர் நங்கையார், நங்கையாரின் இந்த உறுதிப்பாட்டினை, ''நான் உய்ய...' என்று சொல்லிய நாயனாருக்கு ''நம்மை காக்கவரும் மணியை அழைத்து வாருங்கள்'' என்ற நங்கையாரின் நாநலம் நுண்மையாகவெளிப்படுத்துகிறது. செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வமான மக்கட் செல்வத்தையே தருவதற்கு இசைந்தமையால் நங்கையாரை இவ்விடத்தில் திருமகளுடன் ஒப்பிடுகிறார் சேக்கிழார் பெருமான்.

''என்று கணவர் கூறுதலும் அதனுக்கு
இசைந்து 'எம்பிரான் தொண்டர்
இன்று தாழா தமுது செய்யப்
பெற்றிங் கவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்ப' தென நயந்து
'நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு
வாரும் என்றார் திருவனையார்''

பள்ளிக்குச் சென்று பிள்ளையை அழைத்து வந்தார் சிறுத்தொண்டர், பிள்ளையை நீராட்டி, கோலம்செய்து கணவரின் கையில் தந்தார் வெண்காட்டம்மை. அடியவருக்குக் கறியமுதாக இருக்கும் பிள்ளையை உச்சிமோவாது முத்தங்கொள்ளாது ஒரு மறைவிடத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அவர்கள் பக்தியுடன் செய்யும் இத்திருத்தொண்டின் உண்மையை மற்றவர் அறியார் என்பதற்காகவே மறைவிடத்திற்கு எடுத்துச் சென்றனர் என்பார் சேக்கிழார்.

பெற்றதாய் கலன்களைக் கழுவிக் கொணர்ந்தார். தந்தை பிள்ளையின் தலையைப் பிடித்தார். தாய் பிள்ளையின் கிண்கிணிக் கால்கள் இரண்டையும் மடியின் புடையில் இடுக்கிக் கொண்டார். கைகள் இரண்டையும் தம் கையால் பிடித்துக் கொண்டார். அப்போது அந்தப் பிள்ளை சிரித்தான். தம் ஒரே பிள்ளையைக் கருவி கொண்டு தலையரிந்தார் சிறுத்தொண்டர்.

> ''இனியமழலைக் கிண்கிணிக்கால் இரண்டும்
> மடியின்புடை இடுக்கிக் கனிவாய் மைந்தன்
> கைஇரண்டும் கையாற் பிடிக்கக் காதலனும்
> ''நனிநீ டுவகை உறுகின்றார்' என்று மகிழ்ந்து
> நகைசெய்யத் தனிமா மகனைத்
> தாதையார் கருவி கொண்டு தலையரிவார்''.

செயற்கரிய இச்செயலை செய்கிறபோது நங்கையார் நாயனார் இருவரும் பேருவகை எய்தினராம். அடியவரின் ஆணைப்படி இருவரும் உவந்து இச்செயலைச் செய்தனர். எனினும், இருவருடைய உவகைக்கும் வெவ்வேறுகாரணங்களைச் சேக்கிழார் பெருமான் சொல்கிறார். அதனை அறியும்போது நங்கையார் நம் மனத்தில் மேலும் ஒருபடி உயர்ந்துவிடுகிறார். 'ஆம், ஒப்பற்ற மகன் தமக்கு மெய்த்தன்மை அளித்தான்' என்ற நாயனார் மகிழ்ந்தார். நங்கையாரோ, கணவனார் அருமை உயிரை எனக்கு அளித்தான்' என்று மகிழ்ந்தார். என்னே பெண்தன்மை! 'வினையே ஆடவர்க்கு உயிரே... மகளிர்க்கு ஆடவர் உயிரே, என்னும் இலக்கியக் கொள்கையின் வரலாற்று வடிவமாகவன்றோ வெண்காட்டு நங்கையார் திகழுகிறார்.

தம் பிள்ளையை அரியுங்கால் வருத்தமின்றிப் பிடித்துக் கொண்ட நங்கையார், பிள்ளைக் கறியினைப் பொறுமையுடன் சமைக்கவும் செய்தார். நாயனார் அடியாரை அழைத்து வந்தார். நங்கையார் எதிர்சென்று அடியாரை வணங்கிவரவேற்றார். நாயனார் அடியவரின் பாதங்களைக் கழுவினார். அடியாரின் விருப்பப்படி அன்னமுடன் எல்லாக் கறிகளும் படைக்கப்பெற்றன. அடியார் பசுவின் எல்லா உறுப்புக்களையும் கறிசமைத்தீரோ? எனக் கேட்டார். தலை இறைச்சி அமுதுக்கு ஆகாதென நீக்கினோம்' என நங்கையார் சொன்னார். ''அதுவுங்கூட நாம் உண்போம்'' என்று அடியார் சொல்ல, சந்தனத் தாதியார் தான் முன்பே சமைத்து வைத்திருந்த தலைக்கறியையும் எடுத்துவந்து படைத்தார்.

அடியார், சிறுத்தொண்டரை நோக்கி ''நாம் தனியே உண்ணோம். இன்னொரு அடியாரை அழைத்துவாரும்'' என்றார். அடியார் உண்ணுவதற்கு இன்னுமா இடையூறு' என்று வருந்தி வெளியேசென்றார் நாயனார். எங்கு தேடியும் ஓர் அடியாரும் காணப்பெறவில்லை. எனவே வாட்டமுடன் வீடு திரும்பி அதனை அடியாருக்குத் தெரிவித்தார் நாயனார். உடனே, அடியார் ''உம்மைப் போல் நீறிடுவார் உண்டோ? எனவே நீரும் உண்பீர்'' என்று நாயனாரிடம் கூறினார். நாயனாருக்கும் அமுது படைக்குமாறு நங்கையாரிடம் சொன்னார். அம்மையார் தம் கணவருக்கும் அமுது படைத்தார். அடியரை உண்பிக்க வேண்டித்தான் உண்ணமுற்பட்டார் நாயனார். அவரை ''நாம்

> தெளிவு குருவின் திருமேனி காண்டல்
> தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
> தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
> தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே
>
> —திருமூலர்

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை உண்கிறோம். நாளும் சோறு உண்ணும் நீர், நாம் உண்ணுமளவும் த்ரியாது எமக்கு முன் உண்பதென்ன? ''என்று அடியார் தடுத்தார். மேலும் உனது மைந்தனையும் சாப்பிட அழையும்'' என்றார்.

அதைக்கேட்ட நாயனார் வாய்மையுடன், ''இப்போது உதவான் அவன்'' என்றார். ''அவன் வந்தால்தான் நாம் உண்போம் எனவே, நாடி அழையும்'' என்றனர் அடியார். அடியார் சாப்பிட வேண்டுமே என்று கருதித் தம் மனைவியுடன் விரைந்து வெளியில் சென்று ''மைந்தாய் வருவாய்'' என்று அழைத்தார் நாயனார். நங்கையாரும் ''செய்ய சீராளா, வாராய் சிவனடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்'' என்று ஓலமிட்டார்.

அம்மையாரின் உருக்கமான ஓலம் நெஞ்சைப் பிழிகிறது. 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை மாநிலத்தில்' என்பதை அம்மங்கையர் திலகம் அறிவார். எனினும் ஈண்டு அவர் அழைப்பது தம் கணவரின் பணியில் தானும் தலைநிற்க வேண்டும் என்னும் தலையாய கற்பினாலன்றோ, இதனைச்சேக்கிழார்பெருமான் விளக்காமல் போவாரோ?

> ''வையம் திகழுஞ் சிறுத்தொண்டர்
> ''மைந்தா, வருவாய்'' என அழைத்தார்
> தையலாரும் தலைவர் பணி
> நிற்பாராய்த் தாம் அழைப்பார்,
> ''செய்ய மணியே, சீராளா,
> வாராய் சிவனார் அடியார் யாம்
> உய்யும் வகையால் உடனுண்ண
> அழைக்கின்றார்'' என்றோலமிட''

என்று அந்த அவலமான காட்சியை அற்புதமாகச் சித்தரிக்கிறார் தொண்டர் சீர் பரவுவார்.

அன்னையும் தந்தையும் அழைத்தவுடன் சீராளன் பரமனருளால் பள்ளியினின்று ஓடிவருவான் போல் வந்தான். அள்ளி எடுத்தணைத்துக் கணவன் கையிற் கொடுத்தாள் அன்னை. ''திருத்தொண்டர் உண்பதற்கு இனி ஒரு தடையும் இல்லை'' என்று மகிழ்ந்து நாயனாரும் நங்கையாரும் உள்ளே சென்றனர். அங்கே வைரவரையும் காணவில்லை. வைத்த கறியமுதையும் காணவில்லை, நாயனார் சிந்தை கலங்கினார். திகைத்தார். வீழ்ந்தார். தெருமந்தார், தேடினார், தேர்வு செய்ய வந்த தேவாதி தேவனோ, பார்வதி தேவியுடனும் முருகப் பெருமானுடனும் விடைமேல் விசும்பில் காட்சி தந்தார். அன்பினால் வென்ற தொண்டரும் அவருக்கு அமைந்த மாண்புடைய மனைவியாரும் மைந்தரும், தாதியாரும் தம் முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதும் கண்டு பரவசமாய் என்பும் மனமும் கசிந்துருக விழுந்து எழுந்து ஏந்தி இறையருளிற் கலந்தனர்.



# கந்தவேள் கருணை

திருமுருக கிருபானந்த வாரியார்

## (19)

சூரபன்மன் முன்னிலையில் தேவதச்சன் வந்து நின்றான். ''இப்பூவுலகில் வசிப்பதற்கு ஏற்ற அழகானதொரு நகரத்தை விரைவில் அமைத்துக் கொடு'' என்று சூரபன்மன் ஆணையிட்டான். அதன்படி தேவதச்சன் தென் கடலையடைந்தான். அதன் நடுவில் எண்பதினாயிரம் யோசனை விரிவுடையதாக ஒரு நகரத்தை அமைத்தான். செம்பொற் கோபுரங்கள் அந்நகரில் வானளாவி நின்றன; அதில், அரண்மனைகள், மாடமாளிகைகள், பொன்னெடுந்தெருக்கள் ஆகியன பாங்குற அமைந்திருந்தன; எல்லாவகையிலும் சிறந்த பெரிய நவரத்தின மாளிகையையும் அங்கே உண்டாக்கி, அந்நகருக்கு ''வீரமகேந்திரபுரம்' என்று பெயரிட்டான். வீரமகேந்திரபுரத்தின் எட்டுத் திசைகளிலும் எமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணர்புரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் எட்டு நகரங்களையும் அழகுபெற அமைத்தான்.

சூரபன்மன் கட்டளைப்படி தேவதச்சன் சிங்கமுகாசூரனுக்காக வடகடலில் எண்பதினாயிரம் யோசனை விஸ்தாரமுள்ள 'ஆசுரம்' என்னும் நகரத்தை உண்டாக்கினான். நாவலந் தீவில் ஏமகூட மலைக்கு ஒருபுரத்தில் தாரகனுக்காக 'மாயமாபுரம்' என்ற நகரை உண்டாக்கினான், அவுணசேனைகள் தங்குவதற்கென மற்றைய கடல்கள் தோறும், தீவுகள் தோறும் பல நகரங்களை அமைத்தான்.

ஆணையின் வண்ணம் அழகு நகரம் அமைக்கப்பெற்ற செய்தியைத் தேவதச்சன் சூரபன்மனிடம் கூறினான், சூரபன்மன் நல்ல நாளில் தன் படைகளுடன் சென்று வீரமகேந்திரபுரத்தில் குடிபுகுந்தான்.

பிரமன் முதலிய தேவர்கள், சகல புவனங்களையும் வென்று ராஜதானியில் புகுந்த சூரபன்மனுக்கு முடிசூட்ட ஆயத்தம் செய்தனர். சூரபன்மன் நீராடி பீதாம்பரம் உடுத்தி, மலர்களைச் சூடி, ஆபரணங்கள் அணிந்து பட்டாபிஷேகத்திற்குத் தயாரானான். தம்பியர் இருமருங்கும்வர அவுணர்களும் அமரர்களும் துதித்த சிங்காதனத்தில் அமர்ந்தான். பிரமதேவர் மணிமகுடத்தை எடுத்துச் சூட்டினார். அவுணர்கள் ஆரவாரம் செய்து வணங்கினார்கள். தேவர்களும் முனிவர்களும் பொன் மலர்களைத் தூவினார்கள். யுத்தம் செய்து வெற்றி பெற்றவனுக்குரிய மரியாதையைச் செலுத்தத்தானே வேண்டும்?

சூரபன்மனுடைய இளவல்களின் ஏவலினால் தேவர்ராஜனாகிய இந்திரன் சூரபன்மனுக்கு காளாஞ்சியை ஏந்தினான்; குபேரன் அடைப்பையை ஏந்தினான்; வாயு சாமரை வீசினான்; அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான்; சந்திர சூரியர்கள் குடைபிடித்தார்கள். வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினார்கள். கருடனும், கந்தருவரும், சித்தரும் இசை பாடினார்கள். இயமனும் அக்கினியும் பணியாட்களாகப் பிரம்பு ஏந்திச் சபையினரை வரிசைப்படுத்தி நிறுத்திச் சூரபன்மனைப் புகழ்ந்து துதித்தார்கள். தேவ குருவும் அசுர குருவும் முனிவர்களும் பொற்கலசத்திலிருந்த கங்கை நீரைத் தெளித்து ஆசி பல கூறினார்கள். மேனகை, அரம்பை முதலிய தெய்வமாதரர்கள் ஆடிப்பாடினார்கள்.

தேவரும் பிறரும் ஏவல் செய்யச் சூரபன்மன் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசு செய்யலானான்.

ஆட்சிப் பீடத்தில் ஏறியதும் சூரபன்மனின் அதிகாரவெறித் தலைக்கேறியது.

உலகையெல்லாம் பரிபாலிக்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடமும் தன் அதிகார சக்தியைக் காட்டினான் சூரன்.

திருமாலிடம் சூரன் கூறுவான்: ''நீ என் தந்தையாராகிய காசிப முனிவருக்குப் பாட்டன். ஆதலால் உன்னை அழைக்கும் பொழுது விரைந்து வர வேண்டும்'' என்று கட்டளையிட்டான்.

பிரம்மதேவரைநோக்கி, உன் புத்திரர்களுடன் எப்போதும் இங்கு வந்து பஞ்சாங்கம் சொல்லிப் போக வேண்டும்'' என்றான்.

கதிரவனை நோக்கி, ''நீ நம்முடைய நகர் மதிலின் மேல் உக்கிரமான வெப்பத்துடன் செல்லுதல் கூடாது. எந்நாளும் இங்கு இளங்கதிராய்த் திகழ வேண்டும்'' என்று பணித்தான்.

சந்திரனை அழைத்து ''நீ இனி தேய்தல் வளர்தலின்றி, பூரண கலையோடு நம் நகரில் சஞ்சரிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டான்.

அக்கினியை நோக்கி, ''நம் ஊரில் உள்ளவர்கள் யார் நினைத்தாலும் அவரிடத்து வந்து அவர்கள் இடுகின்ற பணியைச் செய்ய வேண்டும். உன்னை என் மக்களில் யார் தீண்டினாலும் செந்தாமரை மலர் போலக் குளிர்ந்திருக்க வேண்டும்'' என்றான்.

இயமனை அழைத்து ''அசுரர்கள், நம்முடைய யானை, குதிரை முதலிய விலங்குகள் ஆகியவற்றின் உயிரைப பறிக்க வேண்டும் என்று கனவிலும் கருதக் கூடாது'' என்று கூறினான்.

வாயுவை அழைத்து, ''என் நகரத்தில் உள்ள புழுதியை நீக்கிச் சுத்தம் செய்வது உன் தொழில்'' என்றான்.

வருணனை நோக்கி ''வாயு சுத்தம் செய்த இடங்களில் எல்லாம் பன்னீர் தெளித்துப் பச்சைக் கர்ப்பூரம், சந்தனம், கஸ்தூரி, முதலியவற்றைத் தெளிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டான்.

சூரபன்மன் தேவதச்சனுடைய மகளாகிய பதுமகோமளையைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினான். விதிப்படி திருமணம் செய்து வைத்தார் சுக்கிராச்சாரியார். தேவர், அசுரர், கந்தருவர், சித்தர், கின்னரர், இயக்கன், நாகர், கிம்புருடர் முதலிய பல சாதிப் பெண்களைக் காமக்கிழத்தியர்களாகக் கொண்டு சூரன் இன்புற்றான். சிங்கமுகாசுரனுக்கு யமனுடைய மகளாகிய விபுதையையும், தாரகாசுரனுக்கு நிருதியின மகளாகிய கௌரியையும் திருமணம் செய்து வைத்து அவர்களை அவர்களது நகரங்களுக்கு அனுப்பி வைத்தான். தன் இளவல்களுக்கு இரண்டு கோடி வெள்ளம் சேனைகளையும் அளித்தான்.

விண்ணுலகத்திலும், மண்ணுலகத்திலும், ஏழ் பிலங்களிலும், எண்டிசைகளிலும் அசுர சேனைகள் சூரபன்மனுடைய கட்டளைப்படி கொடுங்கோல் செய்து வந்தார்கள். தான் வசித்த வீரமகேந்திர புரத்தில் இலக்கம் வெள்ளம் அசுரர்களை மாளிகைகள் தோறும் இருத்தினான் சூரன். யானை, குதிரை, கரடி, புலி, பன்றி, சிங்கம், மான் ஆகியவற்றின் முகங்களைக் கொண்ட எட்டு அசுரத் தலைவர்களை வீரமகேந்திரபுரத்தின் எட்டுத் திக்குகளிலும் உள்ள நகரங்களுக்கு அனுப்பிவைத்தான். தேவர்களும், முனிவர்களும் சூரபன்மனுடைய வீரமகேந்திரபுரத்திலும், சிங்கமுகாசுரனுடைய ஆசுர நகரத்திலும், தாரகாசுரனுடைய மாயமாபுரியிலும் சென்று அவர்கள் இட்ட பணியைச் செயது வந்தார்கள்.

''தேவர்களே! நாம் உத்தரவிடும்போது நீவிர் மீன்பிடித்துத் தர மவண்டும்'' என்று கட்டளை பிறப்பித்தான். தேவர்கள அனைவரும் அஞ்சி நடுங்கிச் சூரன் கட்டளையைத் தவறாமல் நிறைவேற்றி வைப்பதாகக் கூறினார்கள்.

தேவர்கள் தமது விதியை நொந்து கொண்டு ''கற்பகத்தருவின் கீழ் வாழும் வாழ்க்கை நீங்கி வலைஞர்கள் போல் மீன்பிடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதே'' என்று வருந்தி சூரபன்மனை வணங்கி நாள்தோறும் மீன்களைப் பிடித்துவந்து அசுரர்களுக்குக் கொடுத்தார்கள். மீன் கூடைகளைச் சுமந்துவந்த தேவர்களை நோக்கிய அசுரர்கள் அவர்களை ஏளனம் செய்து துன்புறுத்தி மகிழ்வார்கள்.

சூரபன்மனுக்குப் பதுமகோமளையிடத்துப் புதல்வன் ஒருவன் பிறந்தான். அம் மகவைக் கண்டு

## கருணையின் வடிவமே இறைவன்

கருணா நிதியே கடவுளே அன்பர்
பொருளான பேரின்பப் பொற்பே-ஒரு
நாளும்
நீங்கா தெனதறிவில் நின்றசுகா னந்தமே
ஆங்காண் நீ சொக்க நாதா

—சொக்கநாத வெண்பா

மகிழ்ந்த சூரபன்மன் விழாக் கொண்டாடினான். பொன் மழை பொழிந்தான். தன் சுற்றத்தார்க்கெல்லாம் செல்வங்களை வாரி வாரி வழங்கி மகவைத் தொட்டிலில் இட்டான். அரம்பையர்களும் அசுரப் பெண்களும் அக்குழந்தையை ஆசிர்வதித்தனர்.

வளர்பிறைபோல் வளர்ந்துவந்த அக்குழந்தை ஒருநாள் தொட்டிலில் தூங்கும் போது திறந்திருந்த சாளரத்தின் வழியாக சூரியகிரணம் தாக்கியது. உடனே அக்குழந்தை கோபத்துடன் ஆகாயத்தில் பாய்ந்து சூரியனைக் கையால் பிடித்து இழுத்து வந்து தொட்டிலின் காலில் கட்டிவிட்டு முன்போல் துயில் கொண்டது. விண்ணில் விரிசுடரோன் இல்லாமையால் விண்ணவர்கள் அஞ்சிவருந்தினார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் சூரபன்மனிடம் வந்து கதிரவனைச் சிறை விடுக்கும்படி வேண்டிக் கொண்டனர். சூரபன்மன் தன் மகனுடைய வீரச் செயலை நினைத்து மகிழ்ந்தான்.

''என் மகன் சூரியனைச் சிறை செய்தது எனக்குத் தெரியாது. என் மகன் சிறையிடும்படியாக சூரியன் என்ன குற்றம் செய்தான்?'' என்று கேட்டான். ''கதிரவனின் கிரணம் உம்மகனுடைய முகத்தைத் தீண்டியது, அதனால் சூரியனைப் பிடித்துச் சிறையிலிட்டுவிட்டான்'' என்று பிரமதேவர் கூறினார். ''நீங்கள் என் மகனிடம் இன்சொல்லால் வேண்டிக் கதிரவனைச் சிறை விடுத்து இங்கே கொண்டு வாருங்கள்'' என்றான் சூரபன்மன்.


அரம்பயைர்கள் பாடியாட்டுகின்ற தொட்டிலில் கிடந்தான் சூரபன்மனின் மகன். பிரமதேவரும் ஏனைய தேவர்களும் அங்கு வந்து குழந்தைக்கு நல்லாசிகள் பல கூறினர்.

''உங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள்'' என்று அக்குழந்தை பிரம்மதேவரிடம் கேட்டது?

''சூரியனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும்'' என்று பிரமதேவர் வேண்டிக் கொண்டார்.

''உன்னுடைய அஸ்திரத்தை எனக்குத் தந்தால் சூரியனைச் சிறைவிடுப்பேன்'' என்றுகுழந்தை கூறியது. அதற்கு இணங்கிப் பிரமதேவர் தமது மோகப்படையைக் குழந்தைக்குக் கொடுத்தார். அதனைப் பெற்ற அக்குழந்தை சூரியனைக் கட்டவிழ்த்துவிட்டது.

சூரியனும் பிரமதேவரும் குழந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு சூரபன்மனிடம் சென்



றார்கள். அவனிடம் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொன்னார்கள். பானுவாகிய சூரியனிடம் தன் மகவு கோபித்த காரணம் பற்றியே சூரன் தன் குழந்தைக்குப் பானுகோபன் என்று அந்த நாளில் பெயர் சூட்டினான்.

பானுகோபனுக்குப் பின் பதுமகோமளையிடம் சூரபன்மனுக்கு அக்கினிமுகன், இரணியன், வச்சிர வாகு என்று மூன்று புதல்வர்கள் பிறந்தார்கள். ஏனைய மனைவியரும் ஏககாலத்தில் மூவாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள்.

சிங்கமுகாசூரன் தனது பட்டத்துத் தேவியாகிய விபுதையிடம் அதிசூரன் என்னும் மகனையும் மற்ற மனைவியரிடம் நூறு புத்திரர்களையும் பெற்றான். தனது பட்டத்துத் தேவியாகிய சௌரியிடம், தாரகன் அசுரேந்திரன் என்னும் மகனைப் பெற்றான். அப்புதல்வன் சகல நற்குணங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தான். அழகு மிக்க அவன் சகலகலைகளிலும் வல்லவனாக வளர்ந்தான். அவன் தீமைகள் புரியமாட்டான். பாவ காரியங்களில் ஈடுபடமாட்டான். தருமமல்லாதவற்றை நினைக்கவும் மாட்டான். கள்ளிச் செடி அகிலைத் தந்ததுபோல் தாரகன்அசுரேந்திரனைப்பெற்றான்.

சூரபன்மனின் தங்கை அசமுகி திருமணம் செய்து கொள்ளாதவள். கற்பு நெறியை பின்பற்றாமல் விரும்பிய ஆடவருடனெல்லாம் சேர்ந்து வாழ்ந்தாள். பாவமே வடிவாக வந்த அவள்தருமத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. அவள் தேவர்களின் மனைவியரைத் தன் தமையன்மார்களுக்கு மனைவியராக்கி வைப்பாள்; முனிவர்கள் செய்யும் வேள்விகளைக் கெடுப்பாள்; அசுரர் குலத்தை அழிக்க அநீதிபுரிந்து உலவுவாள்; அழகிற் சிறந்த ஆடவரை வலியப் புணர்வாள்.

ஒருநாள் அசமுகி துருவாச முனிவருடைய ஆசிரமத்துக்குச் சென்று ''உங்களுடன் கூடி மக்களைப் பெற வந்திருக்கிறேன்'' என்று கூறினாள்.

துருவாச முனிவர், பெண்ணே! உன்னுடன் நான் கூடினால் என் தவம் வீணாகும்; நீ இங்கு நிற்பதே எனக்குப் பழியைத்தரும்'' என்று கூறினார்.

''முனிவரே! என்னிடமிருந்து தப்பி ஓடிவிடலாம் என்று எண்ணிவிடவேண்டாம். நான் உங்களைக் கூடாது போகமாட்டேன் என்று கூறி அசமுகி அவரைப் பலாத்காரம் செய்தாள். அப்பொழுது அவளிடத்தில் வலிமை மிக்க வில்வலன், வாதாவி என்ற புதல்வர்கள் பிறந்தார்கள்.

அக்குழந்தைகளை அசமுகி அன்புடன் தழுவி உச்சிமோந்தாள். அப்புதல்வர்கள் இருவரும் துருவாச முனிவரை வணங்கினார்கள். அவர் ''உங்களுக்கு என்னவேண்டும்?'' என்று கேட்டார். தந்தையே! உங்கள் தவம் முழுவதையும் எங்களுக்குத் தந்தருள வேண்டும்'' என்று கேட்டனர். ''மைந்தர்களே! நான் அரிதிற் செய்த தவத்தைத் தரமாட்டேன். வேறு பொருள்களைக் கேளுங்கள்'' என்று துர்வாசர் கூறினார். அப்புதல்வர்கள் கோபத்துடன் தங்கள் தந்தையாகிய துருவாசமுனிவரையே கொல்ல விரைந்து எழுந்தார்கள். அவர்கள் செயலைக் கண்டு திகிலடைந்து சினமடைந்த துருவாசமுனிவர் ''நீங்கள் நாடோறும் முனிவர்களுக்குத் துன்பம் செய்து வாழ்ந்து அகத்திய முனிவரால் அழியக் கடவது'' என்று சாபம் கொடுத்து விட்டு மறைந்துபோனார்.

—(தொடரும்)

# கல்யாணசுந்தரமூர்த்தி



**கி. ஸ்ரீதரன்**

பதிவு அலுவலர், தொல் பொருள் துறை.

சிவபெருமான் பார்வதிதேவியைத் திருமணம் செய்துக் கொள்ளும் திருக்கோலமே கல்யாண சுந்தரமூர்த்தி என அழைக்கப்படுகிறது.

சிவபெருமானின் தேவியான தாட்சியாயணி தன் தந்தை தட்சன் நடத்திய வேள்வித் தீயில் மறைந்து இமவானின் மகளாக பிறந்து பார்வதி தேவி என்னும் பெயருடன் வளர்ந்து வருகிறாள். சூரபதுமன் என்ற அசுரன் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி வருகிறான். சிவபெருமானின் மைந்தனால் மட்டுமே அவனை அழிக்க இயலும். எனவே சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் திருமணம் முடிக்க தேவர்கள் எண்ணுகின்றனர். இறைவனும் தேவியை மணம் புரிந்துகொள்ள பார்வதி தேவி இருக்கும் இடத்திற்குக் கிழவேதியராகச் செல்கிறார். பசியாக இருப்பதாகக்கூறி உணவிட வேண்டுகிறார். குளித்துவிட்டு வரும்படி தேவி கூற அருகில் உள்ள ஆற்றில் இறங்கி குளிக்கும்பொழுது முதலை ஒன்று அவர்காலை கவ்வி இழுக்கிறது. உதவிக்காக இறைவன் தேவியை அழைக்கின்றார். வேதியருக்கு தன் கரத்தை நீட்டி உதவி செய்ய தேவி தயங்குகிறார். இறைவனுக்கு மட்டுமே தன் கரத்தை தர நினைக்கிறாள். எனினும் ஆபத்தான இச்சமயத்தில் உதவ வேண்டும் என்பதற்காக கையை நீட்டி கிழவேதியரை இழுக்கிறாள். முதலை மறைந்துவிடுகிறது. இறைவனும் தான் யார் என்பதை வெளிப்படுத்த, பார்வதி மகிழ்ச்சி அடைகிறாள். பின்னர் இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது என வராக புராணம் கூறுகிறது.

இத்தெய்வ உருவ வடிவ நலனைப் பற்றி அம்சுமபேத ஆகமம், உத்தர காமிக ஆகமம், பூர்வ காரணாகமம் ஆகியவை கூறுகின்றன.

ஒரு சமயம் சனகாதி முனிவர்கள் வேத சிவாகமங்களில் தமக்குள்ள ஐயங்களைப் போக்கி அவற்றின் நுண்பொருளை விளக்கிக் கூறுமாறு சிவபெருமானை வேண்டிக்கொண்டனர். அதன்படி சிவபெருமான், அவற்றின் பொருளை விளக்கிக் கூறுவது எளிமையானது அல்ல. எனவே அவர் மௌன நிலையைமேற்கொண்டு யோகநிலையில் அமர்ந்து சின்முத்திரை காட்டியருளினார். அங்ஙனம் சிவபெருமான் யோகநிலையில் அமர்ந்திருந்த ஒரு சில கணங்கள் உலக உயிர்களுக்குப் பல ஊழிக்காலங்கள் ஆயின. அப்பொழுது உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியின்றி செயலற்றுகிடந்தன. அது கண்ட பிரமன், திருமால் முதலியோர் உலக உயிர்கள் போக நுகர்ச்சியில் தலைப்பட்டு இன்புறுமாறு செய்தருளல் வேண்டும் என விண்ணப்பித்துக் கொள்ள இறைவன், உயிர்கள் எல்லாம் இன்பம் அடையும் பொருட்டும் உலகில் இல்லற வாழ்க்கை நடைபெறுதற்பொருட்டும் மலையரையனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து வந்த உமாதேவியாரைத் திருமணம் செய்தருளினார். இந்நிலையே கல்யாண சுந்தரமூர்த்தம் ஆகும் என வரலாறு கூறுகிறது.

இந்திய கலை வரலாற்றில் இத்திருக்கோலம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது. சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளிலும் ஓவியங்களிலும் கல்யாண சுந்தரமூர்த்தியின் திருஉருவத்தைக் காணலாம். எலிபெண்டா, எல்லோரா, குகைக் கோவில்களில் உமாதேவியை சிவபெருமான் திருமணம் செய்து கொள்ளும் காட்சியினை பெரிய அளவில் சிற்ப வடிவில் காணலாம். தஞ்சைப் பெரிய கோயிலிலும் இரண்டாவது இராஜஇராஜன் திருக்கோபுர வாசலின் கீழ்ப்பகுதியிலும், கருவறையில் நுழைவு வாயிலின் இடது படிக்கட்டின் பக்கச் சுவரிலும் சிவபெருமானின் திருமணக் காட்சி தொடர்ச்சிற்பமாகஅமைக்கப்பட்டுள்ளதைக்காணலாம். மதுரை கோயிலில் கம்பத்தடி மண்டபத் தூணிலும், புதுமண்டபத்திலும் இறைவனின் திருமணக் கோலத்தைக் காணலாம். இறைவன் கம்பீரமாக நிற்க தேவி அருகில் நாணத்துடன் சற்றுத் தலை குனிந்த நிலையில் இருக்க அருகிலே திருமால் கெண்டியிலிருந்து நீர்வார்த்துத் தன் தங்கையான பார்வதி தேவியை மணம் செய்து தரும் காட்சியை காணலாம். சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் நான்முகன் வேள்வித் தீ வளர்க்கிறார். கவின்மிகு நாயக்கர் கால சிற்பங்கள் அவை!

செப்புத் திருமேனிகளில் சிவ பெருமானையும் தேவியையும் மட்டுமே காணலாம். இறைவன் வலப்புறம் உள்ள தேவியின் வலக்கையை பற்றிக்கொண்டும், தேவி நாணத்தோடு சற்று கீழே பார்த்த பார்வையுடன் இருக்கும் கோலத்திலிருக்கும் திருமேனிகளை வடக்காலத்தூர், திருவீழிமிழலை, திருக்கோளிலி (திருக்குவளை) திருவேள்விக்குடி, திருவொற்றியூர், திருமணஞ்சேரி, ஆகிய கோயில்களில் காணலாம். ஆனால் திருவெண்காடு, கோனேரிராஜபுரம் செப்புத் திருமேனிகளில் சிவபெருமான் இறைவியின் இடக் கரத்தை பற்றிக் கொண்டிருக்கிறார். அவர்களின் இருபுறமும் திருமாலும், திருமகளும் இருக்கின்றனர். மணப்பெண் பார்வதி தேவியின் முகத்திலே நாணத்தைப் பார்க்கலாம். நாணமுற்ற மணப் பெண்ணை திருமகள் ஒரு கையினால் பின்பக்கம் அணைத்து சிவபெருமானின் அருகே தள்ளுவதைக் காணலாம். திருமால் தாரை வார்த்து தருவதற்காக நிற்கிறார்.

# பிரதோஷ



# மகிமை

கனக சுப்ரமணியம்

உலகிலேயே காலத்திற்கு, அதாவது நேரத்திற்கு அதிக வலிமையுண்டு. திருக்குறளில் திருவள்ளுவர் ''ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்'' என்றார். இதன் பொருள்:

கால நேரம் பார்த்து ஒரு செயலைச் செய்தால் இந்த உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைகூடும். எனவே எந்த ஒரு செயலையும் உரிய நேரத்தில் செய்திடல் வேண்டும்.

இக்கருத்தை ஒத்தாற்போல் நம் முன்னோர் ''பருவத்தே பயிர் செய்'' என்ற பழமொழியைக் கூறியுள்ளனர். எனவே அதற்கு உரிய கால நேரம் உண்டு. இறைவனை மறவாது எப்பொழுதும் வழிபடல் வேண்டும் என்பது நியதி. ஆனால் புண்ணிய காலத்திலும் உரிய நேரத்திலும் வழிபாடுசெய்தால் பலன் பல மடங்கு அதிகம் கிடைக்கும். உயர்ந்த பலனை அடையலாம். கோயிலில் இறைவனை எப்பொழுதும் வணங்கலாம். ஆனால் பூஜா காலங்களில் வணங்கினால் பன்மடங்கு பலன் கிடைக்கும். அப்படிப்பட்ட புண்ணிய காலங்களில்-பூஜா காலங்களில் ஒன்று தான் ''பிரதோஷகாலமாகும்''. பிரதோஷ காலம் என்றால் என்ன? பிரதோஷகாலத்தின் மகிமை என்ன? பிரதோஷ கால வழிபாட்டின் பலன் என்ன? என்பவைகளைப் பற்றிநாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பிரதோஷம் என்பது வடமொழி. அதன் பொருள் 'ப்ர' என்றால் பெரிய; தோஷம் என்றால் துன்பம். பிரதோஷ காலம் என்றால் பெரிய துன்ப காலம் என்று பொருள் கொள்ளலாம்.

தாய்மார்கட்கு நன்றாகத் தெரியும்; குழந்தைகளுக்குத் தோஷம் தாங்கிவிட்டது என்பார்கள். அதாவது குழந்தை துன்பப்படுகிறது என்று பொருள்.

பிரதோஷம் என்றால் பெரியதுன்பம் என்பதைப் பார்த்தோம் அல்லவா? யாருக்கு? எப்பொழுது! ஏன்? என்ன பெரிய துன்பம் ஏற்பட்டது? என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

முன்னொரு காலத்தில் ஸ்ரீவிஷ்ணு, பிரம்மா இந்திராதி தேவர்கள் முனிவர் அசுரர்கள் உள்ளிட்ட, அனைவர்க்கும் பெருந்துன்பம் ஏற்பட இருந்தது. அந்த துன்பம் எதனால் ஏற்பட இருந்தது தெரியுமா? ஆலகாலவிஷத்தினால். அந்த ஆலகால விஷம் எப்படி வந்தது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் தேவர்களும் அசுரர்களும், அமிர்தத்தை உண்ண விரும்பி தசமி திதியன்று, ஒரு வேளை உண்டு மந்திரமலையே மத்தாகவும், சந்திரனைத் தறியாகவும், வாசுகிஎன்ற பாம்பாகிய 1000 நாக்குகளை உடைய நாகராஜனை வடமாகவும் அமைத்து அசுரர்கள் தலைப்புறமாகவும் தேவர்கள் வால்புறமாகவும் நின்று பாற்கடலைக் கடைய ஆரம்பித்தனர். அப்பொழுது மந்திரகிரி என்ற மலை, கடலில் அழுந்த ஆரம்பித்தது. இதைக் கண்ட திருமால் ஆமை வடிவம் எடுத்துத் தாங்கினார். அந்த நாளானது தசமிதிதி நாள். மறுநாள் ஏகாதசி.

பாற்கடலைக் கடையும் பொழுது வாசுகி என்ற பாம்பானது நசுங்கி துன்பப்பட்டு உடல் வலி தாளாமல் வலிவிழந்து வாய்திறந்து அதனிடம் இருந்த ஆலகால விஷத்தைக் கக்கியது. அந்த ஆலகால விஷமானது தேவர்களையும், மற்றவர்களையும் வலமாகவும், இடமாகவும் விரட்டியது. இந்த காரணத்தால்தான் பிரதோஷ நாளன்று சோம சூத்ரப்பிரதட்சணம் செய்ய வேண்டும் என்ற நடைமுறை உள்ளது என்பதை இங்கே நாம் புரிந்து கொள்ள வேண்டும். சோம சூத்ர பிரதட்சணம் என்பது நந்தியிடத்திலிருந்து புறப்பட்டு சண்டிகேஸ்வரர் வரையில் சென்று மீண்டும் நந்திவரையில் வந்து, மீண்டும் நந்தியிடமிருந்து சண்டிகேஸ்வரர் வரையில் சென்று வழிபடுவது தான் சோம சூத்ரபிரதட்சணம் ஆகும்.

வாசுகி என்ற பாம்பானது கக்கிய விஷத்தின் காரணமாக வெண்ணிறமாக இருந்த விஷ்ணு நீலநிறமாக மாறிவிட்டார். அப்பொழுது தேவர்களும்அசுரர்களும், மற்றவர்களும், சிவபெருமானை நாடி ஓடினர். சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். சிவபெருமானிடம் நடந்த செய்தியைச் சொன்னார்கள்.

''சிவபெருமானே! அந்த வாசுகி என்ற பாம்பு கக்குகின்ற விஷம் பெரிய ஜ்வாலையுடன் தோன்றியுள்ளது. அந்த விஷக் காற்று பட்டால் நாங்கள் மட்டுமல்ல இந்த பிரபஞ்சமே—உலகமே அழிந்து விடும். அந்தத் துன்பத்திலிருந்து அழிவிலிருந்து அனைத்து உயிர்களையும் எப்படியாவது தாங்கள் காத்துஇரட்சித்து அருள வேண்டும் என்று சிவபெருமானிடம் தேவர், அசுரர், ஆகியோர்



முறையிட்டு சரணடைந்தனர். உடனே சிவபெருமான் தம் வடிவத்தின் பிரதிபிம்பமாக தோன்றி தம் அணுக்கத்தொண்டராய் தம் அருகிலேயே இருக்கும் சுந்தரரைப் பார்த்து ''சுந்தரா! உடனே ஓடு. அந்த ஆலகாலத்தை திரட்டி எடுத்து வா'' என்று சுந்தரருக்குச்சிவபெருமான் கட்டளை இட்டார். சுந்தரர் உடனே ஓடி அந்த விஷத்தை திரட்டித் தம் கைகளால் ஏந்திவந்து சிவபெருமானிடம் கொடுத்தார். எல்லாம்வல்ல ஏகம்பர ஈஸ்வரராகிய சிவ பெருமான் கிஞ்சித்தும் அஞ்சாது அந்த விஷத்தை வாங்கி அமிர்தம் போல் தாமே உண்டார். அன்று சனிக்கிழமை ஆகும். அன்று ஏகாதசி திதி ஆகும். ஆலகால விஷத்தை அமிர்தமாக எண்ணி ஸ்ரீ பரமேஸ்வரன் உண்டதைக் கண்ட பார்வதி தேவியார் நடுநடுங்கி பயந்து துணுக்குற்று ''சுவாமி! என்ன இது?'' என்று அலறி சிவபெருமான் கண்டத்தைஅதாவது சிவபெருமான் கழுத்தில் முன்புறம் உள்ள நெஞ்சக் குழியைத் தடவினார். அப்படி பார்வதி தடவிய உடனே அந்த ஆலகால விஷம் சிவபெருமான் கண்டத்திலேயே ஒரு முடிச்சுப் போல் நின்று நீலநிறமாகி விட்டது. அதனால் தான் சிவபெருமானுக்கு ''விடமுண்ட கண்டன்'' ''நீலகண்டன்'' ''கறைக்கண்டன்'' என்ற திருப்பெயர்கள் வழங்குகின்றன. அந்த ஆலகால விஷத்தைத் திரட்டி சுந்தரர் தன் கைகளில் ஏந்தி வந்ததால் சுந்தரருக்கு ''ஆலால சுந்தரர்'' என்ற சிறப்பு பெயர் உண்டு.

பார்வதி தேவி ஏன் அலறினார் என்பதை இங்கே நாம் சிந்திக்க வேண்டும். ஈசனே எல்லா உயிர்களிடத்திலும் இடங்கொண்டு கலந்திருப்பவர். அப்படியிருக்க அவருடைய கண்டத்தில் அடங்கியிருக்கும் விடத்தால் மற்ற உயிர்கள் பாதிக்கப்படும் அல்லவா? அப்படி தன்னோடு கலந்திருக்கும் ஜீவகோடிகள் விஷத்தால் பாதிக்கப் படக்கூடாது என்பதற்காகத்தான் பார்வதி அலறினார். அப்பொழுது எந்த அசைவுமின்றி ஈசன் மௌனமாக இருந்தார். அந்த நாள்தான் ஏகாதசி. அந்த அசைவற்ற நாளில் தேவர்களும் பட்டினி இருந்து வழிபட்டனர். அதற்கு அடுத்த நாள் துவாதசி, அப்போது தேவர்கள் எல்லோரும் விரதத்தை முடித்துக் கொண்டு உணவருந்தினர். அதற்கும் அடுத்த நாள் திரயோதசி. இந்த திரயோதசி திதியில் இதுவரை துன்பத்திலிருந்த உயிர்கள் எல்லாம் இன்பம் அடையுமாறு பார்வதி தேவியார் காண சிவபெருமான் தமது கையில் தமருகம் ஏந்தி ரிஷபதேவரின் இரு கொம்புகளுக்கு இடையே திருநடனம் ஆடினார். இப்படி உலகை பரவசப்படுத்த ஈசன் திருநடனம் ஆடிய காலமே பிரதோஷ காலமாகும். இந்தப்பிரதோச காலத்தில் நந்தி தேவருக்கும் தனிப்பெருமை உண்டு. நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே தான் பரம கருணாநிதியாகிய ஈஸ்வரர் நடனமாடுகின்றார். இந்த பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்கு உரிய நந்திதேவர்களுள் தருமதேவதையான நந்தியேஅமைந்திருக்கின்றார். இந்த இடத்திலே இதுபற்றி சற்று விளக்கமாக சிந்திக்க வேண்டும். அதாவது சிவபெருமானுக்கு மூன்று நந்தி தேவர்கள் உண்டு. அவை அதிகாரி நந்தி, திருமால் நந்தி, தருமநந்தி என்பவையாகும்.

பூவுலகில் வாழ்ந்த காலத்தில் தாம் செய்த அரிய தவம் காரணமாக பெருவாழ்வுடன் அதிகாரம் பெற்றவர் அதிகாரநந்தி. இவர் சிவகணங்கட்குத் தலைவராவார். அடுத்தவர் திருமால்; ஈசன் திரிபுர தகனம் செய்யும்போது அவருக்கு உதவுவதற்காக திருமாலே நந்தியாக மாறினார். அவர்தான் திருமால் நந்தி; மூன்றாமவர் தருமநந்தி, தருமதேவதையே ஈசனுக்கு நந்தியாக திகழ்வதாகும். பிரதோச காலத்தில் தருமதேவதையே வலிந்து வந்து சிவபெருமானுக்கு உரிய ரிஷபமானது, பேரழிவு காலத்தில் பிரபஞ்சத்தில் உள்ள அதாவது உலகில் உள்ள எல்லா உயிர்களும் பிரம்மாதி தேவர்களும் சிவபெருமானுக்குள் ஒடுங்கி மறைந்தனர். அப்படி தருமமாகிய தானும் மறைந்துவிடக் கூடாதே என்று கருதிய தருமதேவதை தன்னையே ரிஷபமாக்கி இறைவனின் நடனத்திற்கு உதவும்படி இறைவனிடம் வேண்டியது. அதற்குச்சிவபெருமாணும் அப்படியே அருள் புரிந்தார். தர்மமே நந்தியாக உடனிருக்க இறைவன் தர்மம் மலர, அந்த தர்ம உணர்வில் உலகமும் உயிர்களும் மலர இறைவன் திருநடனம் ஆடும் போது செய்யும் பிரதோஷ வழிபாடு ஒரு பேரானந்

தப்]பெரும் பேறாகும். அந்திநேரத்தில் ஈசனுக்கும், தருமதேவதையாகிய நந்தி தேவருக்கும் ஒரே நேரத்தில் பூஜை நடைபெறுகிறது.

தேவாலயங்களில் பிரதோஷ கால புறப்பாட்டில் இரண்டாவது சுற்றில் சுவாமி ஈசான்ய மூலையில் திரும்பி தெற்கு நோக்கி நின்று சுவாமி காட்சி தரும் வேளையில் தரிசனம் செய்வது சாலச் சிறந்ததாகும்.

சிவபெருமான் ஆலகால விஷத்தைத் தாமே உண்ணாதிருந்தால் பிரதோஷம் ஏற்பட்டிருக்கும். அதாவது பெரிய துன்பம் ஏற்பட்டு உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்துமே அழிந்து ஒழிந்திருக்கும். அதனால் தான் விஷ்ணு பிரம்மா இந்திராதி தேவர்கள் அசுரர் முனிவர் உட்பட அனைத்து உயிர்கட்கும் ஆல கால விஷத்தால் ஏற்பட இருந்த பெருதுன்ப காலமே பிரதோஷ காலம் என வழங்கலாயிற்று. ஸ்ரீபரமேஸ்வரன் அந்த ஆலகால விஷத்தை உண்டு அனைவரையும் காத்து ரட்சித்து அருள்புரிந்த ஒரு முகூர்த்த நேரங்கொண்டகாலமாகிய மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை உடைய காலமே பிரதோஷ காலமாகும். அந்த நேரமாகிய மாலை 4.30 முதல் 6 மணிவரையிலுள்ள முகூர்த்த நேரத்தில்தான் இப்படி உலகைக் காத்தருளிய சிவபெருமானைத் தேவாதி தேவர்கள் உட்பட அனைவரும் வழிபாடு செய்யப்பெறுகின்ற புண்ணிய காலமே, பூஜா காலமே மிகச் சிறந்த காலமாகும்.

ஒவ்வொரு மாதமும் சுக்கில பட்சம் கிருட்டிண பட்சம் என்னும் இரண்டு பட்சத்திலும் அதாவது வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் வரும் திரயோதசி திதி, வருகின்ற நாட்களில் மாலையில் சூரியன் மறைவதற்கு முன்புள்ள மூன்றேமுக்கால் நாழிகை நேரமாகிய மாலை 4.30 மணி முதல் 6 மணிவரை உள்ள காலமே பிரதோஷ காலமாகும். அந்த சூரிய அஸ்தமனத்திற்கு முன்புள்ள நேரம் சிவதரிசனத்திற்கு உத்தமம். அதிலும் சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் மிகச் சிறப்பானது.

இப்பொழுது பிரதோஷ வழிபாட்டின் மகிமையைப் பற்றியும் பார்ப்போம்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தை விரும்பி வேண்டி முன்பு பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் கிடைக்காமல் விஷம் கக்கிய பாம்பினால் ஏற்பட இருந்த துன்பத்தை காத்தருளிய சிவபெருமான் தேவர்கட்கும் அசுரர்கட்கும் இப்பொழுது பாற்கடலை கடைந்தால் நீங்கள் விரும்பிய அமிர்தம் கிடைக்கும் என்று கட்டளையிடவே மீண்டும் சிவபெருமான் கட்டளைப்படி ஏகாதசி அன்று பகல் முழுவதும் பட்டினி இருந்து உறக்கமின்றிதேவர்களும் பாற்கடலைக் கடைந்தனர். உறக்கமின்றி கடலைக் கடைந்த இரவு ஏகாதசி. மறுநாள் துவாதசி. அன்றுதான் அமிர்தம் தோன்றியது. அப்பொழுது பாற்கடலிருந்து ஸ்ரீமகா இலச்குமி, ஐராவதம் என்னும் வெள்ளை யானை, கௌஸ்துபமணி, உச்சைஸ்வரம் என்னும் வெண்ணிற குதிரை, சங்க நிதி, பதும நிதி போன்ற நல்லவை எல்லாம் தோன்றின. அவைகளில் ஸ்ரீ மகாவிட்டுணு ஸ்ரீ மகாலட்சுமியையயும் அமிர்த கலசத்தையும் ஏற்றுக்கொண்டார். அதைப் பெற்றுக் கொண்டதும் மோகினி வடிவம் கொண்டு அசுரர்களை மயக்கி ஏமாற்றி தேவர்களுக்கு மாத்திரம் அமிர்தைப்பங்கிட்டுஅளித்தார். அமிர்தத்தை உண்ட தேவர்கள் மகிழ்ச்சியினால் சிவனை மறந்து மதிமயங்கி களிநடனம் புரிந்தனர்.

## பஞ்ச சபைகள்

1. பொற்சபை — சிதம்பரம்
2. வெள்ளிச் சபை — மதுரை
3. இரத்தின சபை — திருவாலங்காடு
4. தாமிர சபை — திருநெல்வேலி
5. சித்திர சபை — திருக்குற்றாலம்

களிநடனத்தில் ஈடுபட்டு மதிமயங்கிய நிலையில் இருந்த தேவர்கட்கு மறுநாள் திரயோதசி திதி நாள் அன்று தான் சுயநினைவு திரும்பியது. சுய நினைவு திரும்பியதும் ''ஐயோ பரமேஸ்வரன் கருணையால்-அருளால் அல்லவா அழிந்துபட இருந்த நாமும் தப்பியதோடு இந்த அமிர்தமும் கிடைத்தது. அதை மறந்து மதி மயங்கி களிநடனம் புரிந்து காலத்தைக் கழித்து பொழுது போக்கி விட்டோமே! சிவபெருமானைத் தரிசிக்கவில்லையே! என்று உணர்ந்தனர். உடனே பிரம்மாவிட்டுணு இந்திராதி தேவர்கள், முனிவர்கள் யாவரும் ஒன்று திரண்டு கயிலை மலைக்குச் சென்றனர். அங்கே அனைவரும் சிவபெருமானை வணங்கி ''சிவபெருமானே, பரமேஸ்வரா! அழிவிலிருந்து எங்களைக் காப்பாற்றியதோடு மட்டுமின்றி நாங்கள் விரும்பிய வண்ணம் அமிர்தம் பெற அருளிய தங்களை அமிர்தம் பெற்றதும் மதி மயங்கி மறந்து விட்டோம். ஈஸ்வரா! அதற்காக எங்களை மன்னித்து அருளுங்கள்'' என வேண்டினர். இவர்கள் வேண்டுகோளை எற்று அவர்களை மன்னித்து பரமேஸ்வரன் ரிஷப தேவரின் இரு கொம்புகட்கு இடையே நின்று அம்பிகையும் மற்ற அனைவரும் உலகில் உள்ள உயிர்களும் உய்யும் பொருட்டு திரு நடனம், களிநடனம், ஆனந்த தாண்டவம் புரிந்தார். அப்பொழுது கலைமகளாகிய சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரம்மதேவர் தாளம் போட்டார். இலக்குமி தேவி பாடினார். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், கின்னரர்கள், அட்டதிக்கு பாலகர்கள் அனைவரும் வணங்கினர். பிரதோஷம் தோறும் பிரம்மா, விட்டுணு இந்திராதிதேவர்கள் அனைவரும் கயிலை மயிலைக்குச் சென்று ஒன்று கூடி ரிஷபத்தின் இரு கொம்புகளுக்கிடையே ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஸ்ரீபரமேஸ்வரரைத் துதித்து வணங்கி, வழிபட்டு மகிழ்கின்றனர். அந்த நேரத்தில் பார்வதி சமேத ஸ்ரீபரமேஸ்வரர் பிரம்மா, விட்டுணு இந்திராதி தேவர்கள் அனைவரையும் நாம் தரிசிக்கும் பலனும் பாக்கியமும் கிடைக்கின்றன என்பதால் தான் பிரதோஷ நாளில் நாமெல்லாம் ஒன்று கூடி வழிபடுகின்றோம். பிரதோஷ காலங்கள் யாவை என்பதை இப்பொழுது பார்ப்போம்.

1. தினந்தோறும் சூரிய அஸ்தமனத்திற்கு மூன்றேமுக்கால் நாழிகைக்கு முன்பு அதாவது மாலை 4.30 முதல் வானத்தில் நட்சத்திரங்கள் உதயமாகும் நேரம் வரை உள்ள சந்தியா காலம் நித்திய பிரதோஷம் காலம் எனப்படும்.

2. வளர்பிறை திரயோதசி திதியில் வரும் இதே நேரம் பட்ச பிரதோஷம் என்பர்.

3. தேய்பிறை திரயோதசி திதியில் வரும் இதே நேரம் மாதப் பிரதோஷம் என்பர்.

4. ஸ்ரீபரமேஸ்வரர் அந்த ஆலகால விஷத்தை உண்ட நாள் திரயோதசி திதி இருந்த சனிக்கிழமை என்று பெரியோர்களால் நம்பப்படுவதால் சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷ காலம் மிக சிறப்புடையதாதலின் அதனை மஹாப்பிரதோஷம் என்பர்.

5. பிரளய காலத்தில் அனைத்துயிர்களும் ஸ்ரீபரமேஸ்வரனிடம் ஐக்கியமாகிவிடும் எனவே அதனைப் பிரளயப் பிரதோஷம் என்பர். இந்த ஐந்து பிரதோஷ காலங்களிலும் ஸ்ரீபரமேஸ்வரன் ஆனந்தத் தாண்டவம் புரிந்து அனைத்துயிர்களுக்கும் அருள் பாலிக்கிறார் என்று சைவ சாத்திரங்கள் தெரிவிக்கின்றன.

சிவபெருமானுக்கு உரியபல வழிபாடுகளில் தலையாயது பிரதோஷ வழிபாடாகும். பிரதோஷ காலங்களில் ஈசுவர தரிசனம் செய்வதால் துன்பங்களிலிருந்து நீங்கி இன்பம் எய்தலாம். வறுமை, பிணி, கடன், பயம், மனக்கவலை, அகால மரணம், மரண வேதனை முதலிய யாவும் நீங்கும். நாம் செய்தபாவங்கள்விலகி, சிவபுண்ணியப்பேறுவந்து சேரும். பிரதோஷ காலங்களில் சிவபெருமானை வழிபாடு செய்தால் காலை நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் ஈஸ்வர தரிசனம் செய்த பலன் கிடைக்கும். அத்துடன் திருமணம், கைகூடும், திருமாங்கல்யப் பலனும் உண்டாகும்.

பிரதோஷ காலங்களில் பிரம்மா, விட்டுணு, இந்திராதி தேவர்கள் முனிவர்கள் யாவரும் சிவ சன்னதியில் கூடிவழிபடுவதாக ஐதிகம். எனவே நாம் பிரதோஷ வழிபாடு செய்வதால் சகல தேவர்களையும் ஒருங்கே தரிசித்து வணங்கும் பெரும் பாக்கியத்தையும் நாம் அடையலாம். கல்வி, செல்வம், நல்ல சந்தானம் முதலிய சகல சௌபாக்கியங்களும் நமக்குக் கிடைக்கும். எனவே நாம் அனைவரும் ஒரு வைராக்கியத்துடன் பிரதோஷ தினத்தன்றாவது தவறாமல் சிவாலயம் சென்று சிவ தரிசனம் செய்து பெரும் பயன் அடைவோம். பிரதோஷ காலத்தில் வழிபடுவோர். 'ஆயிரம் அசுவமேதயாகங்களைச் செய்த பலன் பெறுவர்'' என்பர் முன்னோர்.

---

# நெறிநின்ற அருள்வாழ்வு

மா. குப்புசாமி, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்

ஆழி சூழ் உலகம் யாவும் அளப்பரிய உயிரினங்கள்
ஊழி முதற்கொண்டு உதிப்பதுவும், உறங்குவதும்
ஆழி யான் வகுத்த ஆற்றலின் விளைவே யாம்.
மானிடராய் பிறத்தல் அரியது, அரியது என்றும்,
மானிடராய் பிறக்க மாதவம் செய்தல் வேண்டு மென்றும்
மானிடராய்பிறந்தோர் மலர்ந்த நல் வேதமன்றோ
மானிடப் பிறவிக்கு இத்துணை மகத்துவம் அளிப் பது ஏனோ?
மாபாரதக் கண்ணன் மானிட வடிவம் கொண்டு
பூ பாரம் தொலைக்கப் பூமியில் தோற்றம் செய்தான்.
எண்ணிலா இடைஞ்சலூடே எடுத்திட்ட கருமம் தன்னை,
மண்ணில் முடித்ததாலே மகேசனாய் நிலைத்து விட்டான்
துன்னிய சுற்றம் யாவும் துரும்பென நினைவில் வைத்து
கண் ணின் கருமணியாய் கருப்பொருள் கருத்திற் கொண்டு,
மண்ணிடை மாந்தர் மனத்திடை வைத்து போற்றும்
எண்ணிடா காலம் முன்னே இயம்பிய கீதை வேதம்
இன்னமும் மக்கள்போற்றி ஏற்றிடும் இனியச்சாறு
கருமமே செய்வாய் ஒன்றும் கருதிடாய் பயனே என்னும்
கரும்பினும்இனியதான கருப்பொருள்கீதையாகும்.
விரும்பியே ஏற்றோர் மண்ணில் வீணாவதில்லை கல்வி
வாய்மையே சிறக்க வேண்டி வையகம் வந்தான் இராமன்
தாய் தந்தை வாக்கே மண்ணில் தலையாய கருமமாக
சேயாய் வந்துதித்த இராமன் சேவடி சென்னி கொள்க.
ஆதிசங்கரர், ஆன்மீக குருமார், அறவழி நில் ஆன்றோரும்,
போதி மரத்திடை மத போதனை போற்றிய புத்தரும்
நீதிவழுவா நெறி முறையில் நீள்புவி ஆண்ட அரசரும்
அட்டியின்றி பிள்ளைக்கறி சமைத்து அமுதிட்ட சிறு தொண்டர்
எட்டிநின்று ஈசன் இணையடி தொழுதிட்டநந்தன்
கட்டியதுழாய் மலர் கழுத்திலிட்டு பின் அரங் கர்க்கு அணிவித்து
மட்டிலா அமுதகான மழைஅருளி அரங்கன் மணங்கொண்ட ஆண்டாள்
விட்டு இவ்வுலக இன்பம் விரதம் மேவிய அருணகிரி
விட்டிடுக இவ்வுலக பந்தமென விளம்பிய பட்டி னத்தார்
அட்டியிலா அன்பே கடவுளென அருளிய அருட் பிரகாசர்
அடியோடு அந்நியர் ஆட்சி அகல அயராதுழைத்த காந்தி
நெடிய நாள் தாங்கள் கொண்ட நிலையான குறிக்கோள் பற்றி
மடியின்றி உழைப்புநல்கி மக்கள்தம் திலகமானார்
உண்ணுவது உடல் வளர்க்க, உறங்குவது களைப்பு நீங்க
எண்ணுவது மனத்திடை ஏதுமில்லா உயிரினங்கள்
மண்ணில் பிறந்ததற்பின் மடிவதைத் தான் கண் டிடுதல்
தொன்மைக் காலமுதல் தொடர்ந்து வரும் இயற்கையன்றோ!
மண்ணில் பிறந்திடும் மாசிலா மானிடர்க்கு மட்டும்
எண்ணித் துணிக கருமம் எனும் ஏற்றமிகு அறி வாற்றல் உண்டு
உன்னத ஆறாம் அறிவை உலக மக்கள் பெற்றதி னால்
எண் ணிலடங்கா உயிரினத்தில் ஏற்றம் பெறு உயிரினமாம்
விண்ணில் மிளிர் துருவன் போல் விளங்குவது ஓரிருவர்
மண்ணில் அவர் கொண்ட மாசில் குறிக்கோளால்
குறிக்கோள்தான் மாந்தர்கள் கொள்வதற்கு வேண்டுவது
நெறிநின்ற அருள்வாழ்வும் ஆண்டவனார் திரு வருளும்.

வாழ்க நலம்!

# தீயும் தீமையும்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தற்காத்துக் கொள்ளுதல் என்பது இயல்பான உயிரியல் உணர்வு. உயிர் வர்க்கம் எல்லாமே தம்மைத் துன்பத்தினின்றும் மரணத்தினின்றும் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகின்றன. முயற்சி செய்கின்றன.

விலங்கியலில் உயிர் அறிவும் உணர்வும் மிக மிகக்குறைவு. மனித இயலிலும் உடலியலை விட உயிர் உணர்வும் அறிவுமே மிகுந்து காணப்பெறுகின்றன. இது இயற்கை. பரிணாம வளர்ச்சியிலும் கூட, இதுவே நியதி.

விலங்குகள், உடல் தற்காப்பிலேயே ஈடுபடும். மனிதன் உயிரியல் அறிவு கைவரப் பெற்றமை காரணமாக ஆன்மாவையும் தற்காத்துக் கொள்ளச் கடமைப்பட்டிருக்கிறான். அதனாலேயே' விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும்' விருப்பம், சிந்தனை ஆகியவற்றோடு தொடர்பு படுத்தி வற்புறுத்தப்பெற்றன. 'தீவினை அச்சம்' என்றே திருக்குறள் அதிகார வைப்பு ஓதுகின்றது.

தீவினை செய்தலில் அச்சமல்ல; தீவினைபற்றிய அளவிலேயே அச்சம்? பெருவெள்ளத்தைக் கண்டு விலகி ஓடுதல் போன்றது. வினையுணர்வுகளினின்றும் அஞ்சி ஒதுங்கிக் கொள்ளுதலில் தனக்குத்தான் உண்மையான அறிவொடுபட்ட விருப்பம் இருக்குமாயின் அவன் பிறருக்கு யாதொரு தீங்கும் சிறியதேயாயினும் செய்யற்க என்று திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்''

என்பது திருவள்ளுவரின் அமுத வாக்கு.

பிறருக்குத் தீங்கு செய்யும்போது பிறருக்கே துன்பம் உண்டாக்குவது போலத் தோன்றினாலும் அது பயன் விளையுங் காலத்துத் துன்பம் செய்தாருக்கும் துன்பம் தருதலின் தற்காத்துக் கொள்க என்ற கருத்து இங்கு பெறப்படுகின்றது.

நாம் பிறிதொருவருக்குத் தீங்குசெய்யத்திட்டம் திட்டலாம்-பேசலாம். திட்டப்படி செய்யலாம். நம்மால் துன்பம் இழைக்கப் பெறுகிறவன் நம்முடைய துன்பத்தை அனுபவிக்கவும் செய்யலாம். அவன் திருப்பித் தீங்கு செய்யத் தெரியாதவனாக இருக்கலாம். செய்தற்குரிய ஆற்றல் அற்றவனாகக் கூட இருக்கலாம். ஆனாலும் அறக்கடவுள் தீங்கு செய்தார்க்குத் தீங்கு செய்யத் திட்டமிடும்; சூழ்ந்து செய்யும். துன்பப்பட்டவன் பொறுப்பை அறக்கடவுள் எடுத்துக் கொள்ளும்.

பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் ஆனால், பிறர் இழைக்கும் துன்பத்தால் அவதியுறுபவன் கேடும் இழப்பும் இல்லாமலேயே நலம் பெறுகிறான். காரணம், அறக்கடவுள் அவனுக்குப் பாதுகாப்பாக இயங்குகிறது. அறக்கடவுளின் ஆற்றல் அளப்பரிது. ஆதலால், தீங்கிழைத்தவனை அது துன்புறுத்தியே தீரும். இதனை

' மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''

என்று திருக்குறள் வலியுறுத்துகிறது.

இனி, பிறருக்குத் தீமை செய்ய நினைக்கின்ற அளவிலேயே நினைக்கின்றவன் தீமையுறுகின்றான் என்பது சான்றோரின் அனுபவ உரை. தனக்குத் தீங்கு நேராமல் இன்னொருவனுக்குத் தீங்கு செய்ய முடியாது என்று ஓர் அனுபவ உரையுண்டு.

திருவள்ளுவர், தீமையையும், தீயையும் ஒப்பு நோக்கி தீச்செயலின் இழிநிலையை அதன் கொடுமையை நமக்கு உணர்த்துகின்றார். தீ, வைத்த இடத்தில் மட்டுமே எரியும். தீ வைக்கின்றவனின் கை பற்றி எரிவதில்லை. தீ, வைக்கப்பெற்ற கூரை மட்டுமே பற்றி எரியும். இது ஒருபால் கேடு.

அது மட்டுமின்றி தீயினை யார் வைத்தாலும் வைத்தவர்களே அணைக்க வேண்டுமென்று அவசியமில்லாமல் மற்றவரும் அணைக்கலாம். ஏன்? இன்று தீயணைக்கும் படையே இருக்கிறது. ஆனால் ஒருவரிடம் உள்ள தீமையைப் பிறிதொருவர் தணிக்க முடிவதில்லை. ஆனால், முடியலாம். அந்த முயற்சி தூண்டுதலும் வழி நடத்தலும் என்ற அளவிலேயே அமையும்.

தீமையுடையவர் உணர்விசைந்து உடன்பட்டாலே மாறுதல் உண்டு. அப்படியில்லையேல் ஒருவரிடமுள்ள தீமை தணிவதில்லை. இந்தச் சிறந்த நோக்கத்தான் தன்னிடமுள்ள தீமையைத்

தானே உணர்ந்து நொந்து வருந்தி அழுது பாடித் தீமையிலிருந்து விடுதலை பெறச் சான்றோர்கள் முயன்றிருக்கிறார்கள்.

இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே சமயங்களில் பிரார்த்தனையும், வழி பாட்டு முறைகளும் தோன்றின. உண்மையான பிரார்த்தனை என்பது ஒருயிர் தன்னையே நோக்கித்தன் தீமை கருதி, அழுது தன் கண்ணீரால் தன்னுடைய தீமையைக் கழுவுதலேயாகும்.

ஆனால், மனிதனின் வியாபாரப் புத்தியும் சோம்பலும் இந்தத் தூய சமயத்தையும் விட்டபாடில்லை. இதன் விளைவாகவே புரோகித சமயம் தோன்றிற்று. ஒருவருக்காகப் பிறிதொருவர் அழத் தொடங்கி விட்டனர்.

பாபர் போல அழுதால் பயனிருக்கலாம். அது உண்மையிலேயே ஒன்றித்து அழுதது. ஆனால் இவர்கள் அழுவதோ பெறக்கூடிய காசுகளுக்கேயாம். காலப் போக்கில் அழுவது கூட விடுபட்டுப் போயிற்று. அவர்கள் சமயத்தின் முதலாளிகளாகி விட்டார்கள்.

முழுநிலவை மறைத்த நிழலைக் கருதி முதலைக் கண்ணீர் வடித்துக் குளத்தில் மூழ்கும் மனிதர்கள்-நிறைவுடைய நன்னெறியாம் சமயத்தில் படிந்த தீமையை நினைத்து அழாதது ஏனோ? ஒருவரிடமுள்ள தீமையை அவனே உணர்ந்தால் தான் மாற்றிக் கொள்ள முடியும். பிறர் அணைக்கும் தீயைவிடத் தம்மிடமே பொறுப்புள்ள தீமை கொஞ்சம் சிக்கலானதேயாம்.

அதோடு, தீ எரியத் தொடங்கியவுடனேயே வெளிப்படையாகத் தெரிகிறது. ஆதலால், உடனடியாக அணைக்கும் முயற்சியும் தோன்றி விடுகிறது. ஆனால், தீமையோ உடனடியாகத் தெரிவதில்லை. உடனிருந்தும் ஒட்டியும், பச்சை உறவு காட்டியும், இன்ப நயங் காட்டியும் பையப் பைய அரித்துக் கெடுப்பது.

பலர், தன்னிடமுள்ள தீமையையேகூட அறியாமையின் காரணமாக நன்றென்றே கருதிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது "அவரிடமில்லையா? இவரிடமில்லையா? அதற்கு இது என்ன மோசம் போய்விட்டது?" என்று சமாதானம் கற்பித்துக் கொள்கிறார்கள்.

பலரிடம் வறுமை இருப்பதனால், வறுமையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றார்களோ? சிலரிடமுள்ள செல்வத்தில்தானே நாட்டம் வைக்கிறார்கள்! ஆதலால் வெளிப்பட இருந்து காட்டி, சீக்கிரத்தில் அணைக்கப்பெறும் தீயைவிட உள்ளிருந்து எரிந்து அழிக்கும்தீமை மிகவும் கொடியது.

தீயினால் எரிவன வீடுகளேயாம். வீடுகள் படைப்புகள்; ஆனால் தீமையினால் அழிவதோ மனிதனேயாம். படைப்புப் பொருள்கள் அழிந்தால் திரும்பப் படைக்கலாம். படைப்புக்குரிய மனிதனே அழிந்துபோனால் இந்த வகையிலும் தீமை கொடியது.

தீமையினால் விளையும் தீது ஒரோ வழி எல்லைக்குட்பட்டதன்று. நில எல்லைக்கும் உட்பட்டதன்று. கால எல்லைக்கும் உட்பட்டதன்று. தீமை மனித சமுதாயத்தையே அழிக்க வல்லது. ஏழேழ்தலைமுறைக்கும் அழிக்கவல்லது. இந்த வகையினும் தீயினும் தீமை கொடியது.

## இறைவனின் எண்குணங்கள்

1. தன்வயத்தன் ஆதல்
2. தூய உடம்பினன் ஆதல்
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றும் உணர்தல்
5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
6. பேரருள் உடைமை
7. முடிவிலா ஆற்றலுடைமை
8. வரம்பில் இன்பமுடைமை

---

தீ, கூரையிலிருந்தால் கேடு, ஆனால் அடுப்பிலிருந்தால் ஆக்கம். அணையா அடுப்பு வளம் நிறைந்த மனையின் சிறப்பு. ஆதலால் தீ அடுப்பிலிருக்க வேண்டும்.

ஆனால், தீமையினால் ஒருவழியிலும் பயனில்லை. எந்த அளவிலும் பயன் தராது. பயன் தருவது போலத் தோற்றமளித்தாலும் சர்க்கரைப் பாகு தடவிய நஞ்சுருண்டையேயாம். நாவில் கரும்பின் இனிமை தென்படும். உடனேயே உயிர் கொள்ளும் நஞ்சும் தென்படும்.

தீமையினால் வரும் பயன்கள்உண்டு களித்தல், வரைவின் மகளிர் முயக்கு எல்லாவற்றையும் விடப் பிணந்தழுவிய முயக்கு ஆகியன போலாம். ஆக ஒரு போதும் பயன்படாது. ஆதலால், தீயை விடத்தீமைகொடியது. அதனால் அன்றோ திருவள்ளுவர்


''தீயவை தீற பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

என்று குறிப்பிடுகின்றார். தீயவை தீய பயத்தலால் என்ற சொற்றொடரும், தீயினும் என்பதிலுள்ள உம்மையும் அறிவுக்கு விருந்து. ஆழச் சிந்திப்பாரின் அக உலகிற்குப் பாதுகாப்பு.

தீமை செய்வோர் தீமை செய்யட்டும். செய்து கொண்டே இருக்கட்டும். அதனால் நாய்கள் தாம் கக்கியவற்றைத் தாமே தின்பது போலத் தம்முடைய செயல்களின் விளைவுகளை, அவர்களே அனுபவிப்பார்கள், அறக்கடவுள் சூழ்ந்து ஊட்டுவிக்கும்.

ஆதலர்ல், அச்சமின்மை பேசிய திருவள்ளுவர் அஞ்சச் சொல்லுகிறார். தீயனவற்றிற்கு அஞ்சச்சொல்கிறார். புறத்தில் தாக்கும் தீமைகளைக் கண்டு அஞ்சுவது போலவே, ஏன்? அதனினும் ஒருபடி மேலாக அகத்தில் தோன்றித் தாக்கும் தீமையைக் கண்டு அஞ்சச் சொல்கிறார்.


மடியில் தீயினைக் கட்டிக்கொண்டு, நானிலத்தில் நடப்பாரில்லை. அது போல் மனத்தில் தீமை தாங்கி நடப்பாருமில்லை என்கிற நிலை உருவாக வேண்டும். அதுவே வள்ளுவர் உலகம்.


சித்திர பாரதம்
கதை வசனம் செவ்வேள்
படம் MN. ராஜா
ஏகலைவனின் வாத்சைமிகு உபசரிப்பில் துரோணரின் மனம் குதுகலிக்கவில்லை.
என் மாணவரில் மேம்பட்டவன் என்ற சிறப்பு அருச்சுனனையே சேர வேண்டும். இதற்கு என்ன வழி?
ஏகலைவா! குரு காணிக்கை எனக்கு ஏதும் நீ தரவில்லையே!
கேளுங்கள் குருவே! எது வேண்டுமானாலும் தருகிறேன்!
உனது வலது கை கட்டைவிரலே நான் வேண்டும் காணிக்கை
துரோணர் கேட்டவுடனே தன் வலது கை கட்டைவிரலைத் துணித்துக் குருவிற்குக் காணிக்கையாக்குகிறான் ஏகலைவன்.
ஏகலைவனுடைய குருபக்தி துரோணரைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.
ஏகலைவா உன் குருபக்தியை இவ்வையம் என்றும் போற்றிப் பாராட்டட்டும்!
இரத்தினங்கள் ஒளிவீசும் யுத்த அரங்கத்தில் துர்க்காதேவிக்குப் பூஜை செய்கிறார் துரோணர்.
"என் பிரிய மாணவர்களே! நீங்கள் என்னிடம் கற்ற வித்தைகளை எல்லாம் இப்பார் அறிய இப்போது செய்து காட்டுங்கள்
தருமர் முதலில் வருகிறார்.
குருநாதரையும் பிதாமகர் முதலான பெரியோர்களையும் வணங்கி வேலாற்றலில் வல்ல தன் போர்த் திறமையைக் காட்டுகிறார்.

பிறகு வீமனும் துரியோதனனும் கதாயுதம் கொண்டு மோதுகிறார்கள். யானைகள் இரண்டு மோதுவதைப் போல் இருவரும் உக்கிரமாக மோத அச்சம் கொண்டு மக்கள் கலைந்து ஓடுகின்றனர்.




துரோணரின் மகன் அசுவத்தாமா அவ்விருவருக்கும் இடையே சிங்கமெனப் புகுந்து அவர்களை விலக்கிவிட, ஒருவரையொருவர் கறுவிக்கொண்டு தத்த இடத்தை அடைகின்றனர்.



அடுத்து அரங்கத்திற்குள் வரும் அர்ச்சுனன், வானவரும் வாழ்த்தும் வண்ணம் தன் வில்லாற்றலைக் காட்டுகிறான்.

அர்ச்சுனனுடைய அம்புகளால் யானையும் சிங்கமும் தோன்றி மோதுகின்றன. நாகமும் கருடனும் தோன்றிச் சீறுகின்றன. அக்கினியாஸ்திரத்தால் தீ பரவச் செய்து அத்தீயை வருணாஸ்திரத்தால் அணைக்கிறான் அர்ச்சுனன்



அர்ச்சுனனின் ஈடு இணையற்ற வில்லாற்றலைக் கண்டு விண்ணும் மண்ணும் எதிரொலிக்க மக்கள் வாழ்த்தொலி எழுப்புகின்றனர். துரோணரும் மனம் பூரித்து "அர்ச்சுனனுக்கு இணையான வில்வீரன் இவ்வையத்திலேயே இல்லை" என்று பாராட்ட, "ஏன் இல்லை?" என்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன் வருகிறான் கர்ணன்.



# நரசிங்கத்தைப் பிணித்த பக்தர்

டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன்

ஆதிசங்கரரின் முக்கிய சீடர்கள் நால்வருள் பத்மபாதர் என்பவர் ஒருவர். இவர் சங்கரரின் சீடராகி, துறவு கொள்ளுவதற்கு முன்னால் ஒரு நரசிம்ம உபாசகராகத் திகழ்ந்தவர்.

உரிய குருநாதர் மூலம் அவர் நரசிம்ம மந்திரத்தை உபதேசமாகப் பெற்றிருந்தார். பல ஆண்டுகள் அம்மந்திரத்தை ஜபித்து வந்தார். பல இடங்களுக்கும் அலைந்து திரிந்தார். அவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது ஒரு காட்டிற்கு வந்தார். அங்கும் அன்ன ஆகாரமின்றி நரசிம்மரின் மந்திரத்தை ஜபித்து வந்தார்.

சிறந்த யோகியாகக் காணப்பட்ட அவரை காட்டு வேடன் ஒருவன் கண்டு கொண்டான். அவரை அணுகி விசாரிக்கத் தொடங்கினான்.

''சுவாமி! தாங்கள் யார்? ஏன் இக்காட்டிற்கு வந்தீர்கள்? '' என்றான்.

''வேடனே, நான் ஒரு நரசிம்ம உபாசகன். நரசிம்மரின் தரிசனத்தைப் பெற வேண்டி நான் பல ஆண்டுகளாக மந்திரத்தை ஜபித்து வருகின்றேன். அவரைக் காணவேண்டித் தவம் புரியத்தான் இங்கு வந்தேன்'' என்றார் உபாசகர்.

''சுவாமி! நரசிம்மம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? எதற்காகத் தாங்கள் அதனைக் காண வேண்டும்?''

''நரசிம்மம் என்பது சாதாரணமான விலங்கு இல்லை! சிங்கமும்மனிதனும் இணைந்த பயங்கரத் தோற்றத்துடன் அது இருக்கும்! அதனை எளிதில் கண்டுவிடமுடியாது'' என்றார் யோகி.

'' சுவாமி! தாங்கள் சொல்லும் விலங்கைப் பற்றி நான் கேள்விப் பட்டதே இல்லையே! அப்படியொன்று உண்மையில்இருக்கிறதா?''ஆச்சர்யத்துடன் வினவினான் வேடன்.

''வேடா! நிச்சயமாக நரசிம்மம் இருக்கிறது. ஆனால் அதனைக் காண மந்திர உபதேசமும் கடுந்தவமும் வேண்டும். பல ஆண்டுகள் மந்திரம் சொன்ன என்னாலேயே இன்னும் அதனைக் காண முடியவில்லை.'' என்றார் உபாசகர்.

''ஏன் சாமி, அது விலங்கு என்கிறீர்கள்? ஆனால் காண முடியாது என்றும் சொல்லுகிறீர்கள்! இந்தக் காட்டில் அது இருக்கிறதா?'

''இந்தக் காட்டில் மட்டுமல்ல! அது எங்கு வேண்டுமானாலும் தோன்றும்! தூணில் கூடத் தோன்றும்!''

''அப்படியானால் இந்தக் காட்டில் அது நிச்சயம் இருக்கிறதல்லவா?''

''நிச்சயமாக இருக்கிறது! ஆனால் அதனைக் காண்பதுதான் அரிது'''

''சுவாமி! வேடனான எனக்கு இந்தக் காட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் தெரியும். இது வரை நீங்கள் சொன்னது போன்ற ஒரு விலங்கினைக் கண்டதில்லை!''

யோகி தனக்குள் சிரித்துக் கொண்டார். ''கல்லாத காட்டு வேடன்! இவனுக்கு நரசிம்மத்தைப் பற்றி என்ன தெரியும்? இவனிடம் போய் அவரைப் பற்றி எதற்கு மேலும் விளக்க வேண்டும்?' தன் அறிவை உயர்வாகவும் வேடனின் அறிவைத் தாழ்வாகவும் மதிப்பிட்டார் யோகி.

ஆனால் வேடன் விடுவதாக இல்லை.

''சுவாமி! நீங்கள் சொன்ன அதிசய விலங்கைக் காண வேண்டும். அவ்வளவுதானே! நான் அதற்கு உதவுகிறேன். இந்தக் காட்டில் அது எங்கிருந்தாலும் அதனைப் பிடித்து வந்து உங்கள் முன் நிறுத்துகிறேன்!'' என்றான்.

மீண்டும் தனக்குள் சிரித்துக் கொண்டார் உபாசகர்.

''உன்னால் முடியாதப்பா! நீ ஏன் வீண் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்?''

''இதிலென்ன சுவாமி சிரமம்? தங்களைப் போன்ற யோகிகளுக்கு உதவுவது என்னைப் போன்ற அற்ப வேடனுக்குப் பெரும் புண்ணியம்! நீங்கள் இங்கேயே அமர்ந்திருங்கள். நான் சென்று நரசிம்மத்தை இன்று மாலைக்குள் பிடித்து வந்து உங்கள் முன் நிறுத்துகிறேன். இது சத்தியம்! அப்படி உங்களுக்கு உதவ முடியாமல் போனால் நான் இன்று மாலையே தீயில் விழுந்து இறப்பேன்! இது எங்கள் குலதெய்வமான முருகன்மீது ஆணை'' என்று சபதம் செய்து புறப்பட்டான் வேடன்.

''வேடன் அவசரப்பட்டு முட்டாள் தனமாகச் சபதம் செய்து விட்டான்'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டார் உபாசகர்.

அன்று பகல் முழுவதும் நரசிம்மத்தைத் தேடி அலைந்தான் வேடன். நரசிம்மம் எங்கும் கிடைக்கவில்லை. மாலையும் வந்தது. எந்த மூலை முடுக்கிலும் நரசிம்மம் அகப்படவில்லை.



வேடன் ''பெரியவரிடம் நான் சபதம் செய்தது செய்ததுதான்! முருகப் பெருமானே! உன் மீது ஆணையிட்டுவிட்டேன். சத்தியம் தவறக் கூடாது! நரசிம்மத்தை என்னால் கொண்டு செல்ல இயலவில்லை. இதோ எரிமூட்டி உயிரை மாய்த்துக் கொள்வேன்'' என்றான்.

காட்டு மரங்களையும் சிறகுகளையும் சேர்த்துத் தீ மூட்டினான். குலதெய்வமான முருகனைத் தியானித்து தீக்குள் பாய முற்பட்டான்!

ஆனால்! அப்போது! சிம்மத்தின் உறுமல்! திரும்பிப் பார்த்தான்! எதிரே நரசிம்மம்! யோகி கூறிய அடையாளங்கள் அத்தனையும் இருந்தன.

''நல்லவேளை, இப்போதாவது அகப்பட்டாயே! பெரியவர் காத்திருக்கிறார் வா! வா!'' என்றபடி காட்டுக் கொடிகளால் நரசிம்மத்தை இறுகப் பிணைத்து இழுத்துச் சென்றுவிட்டான்!

''சுவாமி, இதோ நீங்கள் கேட்ட விலங்கு கிடைத்துவிட்டது. முருகப் பெருமான் என்னைக் கைவிடவில்லை'' என்றான் வேடன்.

யோகியின் கண்களில் நரசிம்மம் புலப்படவில்லை.

''என்ன உளருகிறாய்? எங்கே நரசிம்மம் இருக்கிறது? என்றார்.

''இதோ தாடியும் மீசையுமாய் பயங்கரத் தோற்றத்துடன் நிற்கிறதே சுவாமி''.


ஆனால் அவருக்குப் புலப்படவில்லை.

அப்போது நரசிம்மமூர்த்தி ஓர் பயங்கர உறுமல் செய்து விட்டுப் பேசலானார்.


''யோகியே, வேடனது உறுதியைப் பாரும், பல ஆண்டுகள் எனது மந்திரத்தை ஜபித்த உமக்கு வைராக்கியமும் பூரண நம்பிக்கையும் இல்லை, அத்துடன் நீர் பெரிய உபாசகர் என்றும் இவன் அற்ப வேடன் என்று உனக்கு ஆணவ மனம். இவனோ உமது சொற்களில் நம்பிக்கை வைத்தான். தன் குல தெய்வத்தை நம்பினான். வைராக்கிய சித்தத்துடன் முயன்றான். சத்தியத்துக்காக உயிரையும் விட துணிந்து விட்டான். எனது தரிசனமும் தனது குல தெய்வத்தின் அருளே என்ற பக்குவப்பட்ட மனோபாவம் கொண்டிருக்கிறான். எனவே எமது உருவம் இவனுக்குப் புலப்பட்டது. இப்பிறவியில் உமக்கு எமது குரல் மட்டுமே கேட்டது. அடுத்த பிறவியில் தரிசனம் அளிப்போம். ஆனாலும் இப்பிறவியில் நீர் வேண்டும் பொழுது ஒரு முறை உமக்கு உதவுவோம்'' என்று விளக்கி மறைந்தார் நரசிம்மமூர்த்தி.

கட்டமுடியாத நரசிம்மத்தையும் ஒரே பகலில் முயன்று கட்டிய இவ்வேடனின் உறுதிப்பாடும் சொல் தவறாத நேர்மையும், நம்பிக்கையும் சிறந்த உபாசகரின் கண்ணைத் திறக்குமளவிற்கு உயர்ந்து நின்றதல்லவா?

— — — —



# திருப்புட்குழி



**கு. தாமோதரன்,** எம்.ஏ.,
**துணை இயக்குநர்,**
**தொல்பொருள் ஆய்வுத்துறை**

சென்னையில் இருந்து வேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் ''பாலுசெட்டிச்சத்திரம்'' என்ற ஊர் உள்ளது. இங்கிருந்து தென் திசையில் செல்லும் பாதை வழியாக நடந்து சென்றால் 'திருப்புட்குழி' என்ற ஊரை அடையலாம். இங்கு மிகவும் உயர்ந்து நிற்கும் கோயில் திருச்சுற்று மதில் செல்லுகின்றவர்களை வருக வருக என்று வரவேற்பது போல் உள்ளது.

தமர் நாட்டு, தமர் கோட்டத்து 'சித்திரமேழி திருப்புட்குழி' என்று இவ்வூரைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கல்வெட்டுகள், இங்கு எடுக்கப்பட்டுள்ள கோயிலைப் போரேற்றுப் பெருமாள் கோயில். எம்பெருமானார் விஜயராகப் பெருமாள் கோயில், சித்திரமேழி திருப்புட்குழி நாயனார் கோயில் என்று பல பெயர்களில் குறிக்கின்றன. இங்கு எழுந்தருளி உள்ள இறைவன் ' திருப்புட்குழி நாயனார் விசையராகவப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார். திருமங்கையாழ்வார் 'புட்குழிப் போரேறு' என்று இப்பெருமாளைப் போற்றிப் பாடுகிறார். இறைவியின் பெயர் 'மரகதவல்லித்தாயார்' என்பதாகும்.

தொண்டை நாட்டில் தலை சிறந்து விளங்குவது 'காஞ்சிப் பகுதியாகும்'. இப்பகுதியில் உள்ள பதினெட்டு திருப்பதிகளுள் கடைசி திருப்பதியாக விளங்குவது 'திருப்புட்குழி'யாகும். இத்திருத்தலம் 'திருமங்கை ஆழ்வாரால்' மங்களாசாஸனம் செய்யப் பெற்றதாகும்.

''அலங்கெழு தடக்கையாயன் வாயாம்பற்கு
அழியுமா லென்னுள்ள மென்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழிபாடும்
போதுமோ நீர்மலைக் கென்னும்
குலங்கெழு கொல்லி கோமளவல்லி
கொடியிடை நெடு மழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக்கென நினைத்திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே.

என்று பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வார் பாடுகின்றார்.

திருப்புட்குழியின புராண வரலாற்றை நோக்குவோமாயின் இராமபிரான் வனவாசத்தில் சீதையைப் பிரிந்து, தேடிச் செல்லும்போது, இராவணனிடம் சீதையை மீட்கப் போரிட்டு சிறகொடிந்து மரண தருவாயில் உள்ள ஜடாயுவைச் சந்தித்தார். ஜடாயு தமக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை இராமபிரானையே செய்யுமாறும், தமக்கு ஸ்ரீதேவி, பூதேவியுடன் பரமபதக் காட்சி அருளுமாறும் வேண்டினார். இராமனும் அவ்வாறே காட்சி தந்து தமது வலது திருவடியைத் தொங்க விட்டுக்கொண்டு ஈமகாரியங்களைச் செய்து அருளினார். அப்போது வலது பக்கம் தகனம் செய்யவே, ஸ்ரீதேவியால் சுவாலையைப் பொறுக்க முடியாமல் சற்று விலகி இடது பக்கம் வந்து தலை சாய்த்துக் கொண்டு இருக்கிறார். பூமிதேவி வலதுபக்கம் வந்து ஜடாயுவின் தகன சுவாலையை பொறுத்துக் கொண்டு சேவை தருகிறார். இந்தக் காட்சியை இன்றும் இக்கோயிலின் உண்ணாழியில் காணலாம். ஸ்ரீதேவி வலப்பக்கமும், பூதேவி இடப்பக்கமும் இருக்கும் முறை இக்கோயிலின் இதனால் மாறி உள்ளது. ஜடாயுவுக்கு நீர்க் கடன் செய்ய வருண மந்திரம் கூறித் தன் வில்லின் நுனியால் இராமபிரான் உண்டாக்கிய திருக்குளமே 'ஜடாயுதீர்த்தம்' என்பது. இதுவே 'ஜடாயுபுஷ்கரணி' என்று அழைக்கப்படுகிறது. இத்தலமும் ஜடாயுவின் பெயரால் (புள் பறவையான ஜடாயு) திருப்புட்குழி என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு இதுவே பெயராக அமைந்துள்ளது சிறப்புடையதாகும்.

இங்கு எழுந்தருளி உள்ள 'மரகதவல்லித் தாயார்' மிகவும் மகிமை வாய்ந்தவள் என்று மக்கள் போற்றி வருகின்றனர். புத்திர சந்தான பாக்கியம்இல்லாத பெண்கள் 'ஜடாயுபுஷ்கரணியில்நீராடி தேவஸ்தானத்தின்' திருமடைப் பள்ளியில் வறுத்துக்கொடுக்கும் பச்சைப்பயிறை தாயார் சந்நிதியில் மடியில் கட்டிக் கொண்டு ஒரு நாள் தங்கி, பக்தி சிரத்தையுடன் உபவாசம் இருக்க வேண்டும். மறு நாள் அவிழ்த்துப் பார்க்கும்போது பயறு முளைத்திருந்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இதனாலேயே தாயார் 'வறுத்த பயறு முளைக்க வைக்கும் மரகதவல்லி தாயார்' என்று அழைக்கப்படுகிறார்.

இது ஒரு சிறந்த பிரார்த்தனை தலம். அமாவாசை தோறும் இங்குள்ள ஜடாயுபுட்கரணியில் நீராடி எம்பெருமானையும் தாயாரையும் வழிபட்டால் சகல பாவங்களும் நிவர்த்தியாகி சகல செல்வங்களும் பெருகி வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

திருப்புட்குழி பல்வகைச் சிறப்புக்களையுடைய ஊராகும். இங்கு மகான்கள் பலர் வாழ்ந்துள்ளனர். விசிஷ்டாத்வைதத்தைத் தோற்றுவித்த ஸ்ரீவைஷ்ணவப்பெரியோராகிய இராமாநுஜர், இவ்வூரில் இருந்து யாதவப் பிரகாசரிடம் வேதத்தைப் பற்றிக் கற்றுத் தெளிந்தார். எம்பாரும் (கோவிந்த பட்டர்)இவ்வூரில்தங்கியிருந்து சிறுவயதில் யாதவப் பிரகாசரிடம் வேதாந்த நூல்களைக் கற்றார்.

குருபரம்பராபரபாவத்தை அளித்தவரும் ஸ்ரீநம்பிள்ளையின் சீடராக இருந்து கொண்டு வாழ் நாளெல்லாம் அவருக்கு அடிமை செய்து போந்த வருமான பின்பழகராம்பெருமாள் ஜீயர் அவதரித்த இடமும் இவ்வூரே. அட்டதிக்கஜாசாரியர்களான கோயிலண்ணன், எறும்பியப்பா, பிரதிவாதி பயங்கரம் அண்ணா ஆகியோரும் இங்கு எழுந்தருளி ஸ்ரீவிஜயராகவனை மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள். இராமாநுஜர் திருமலைக்கு எழுந்தருளியபோதும், அங்கிருந்து கோவிந்த பட்டரைத் (எம்பாரைத்) திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றபோதும் இவ்வூருக்கு எழுந்தருளி தங்கி இருக்கிறார் என்பது சிறப்புடையதாகும்.

விஜயராகவப்பெருமாள் திருக்கோயிலின் முன் ஓங்கி நிற்கும் 'கொடிக்கம்பத்தை' காணலாம். இது அத்திமரத்தில் செய்யப்பட்டதாகும். இதன் தென் பக்கத்தில் 'ஜடாயுபுட்கரணி' உள்ளது. கோயில் நுழைவாயிலின் மேல் கட்டப்பெற்றுள்ள கோபுரம் அண்மைக் காலத்தில் கட்டப்பெற்றதாகும். அடிப்பகுதி கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ளது. நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் திண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. தென் பக்கத்தில் உள்ள திண்ணையில் உள்ள முதல் தூணின் அடிப்பகுதியில் இராமாநுஜர் (உடையவர்) உருவம் செதுக்கப்பெற்றுள்ளது. இவர் நின்ற நிலையில் 'தண்டத்தை' இடது தோளில் அணைத்த வண்ணம் இரண்டு கைகளையும் வணங்கும் நிலையில் காட்டப் பெற்றுள்ளது.

நுழைவாயிலைத் தாண்டி உள்ளே வந்தவுடன் ஒரு பெரிய மண்டபத்தைக் காணலாம். இதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக மேலே சென்றவுடன் மண்டபத்தின் முன் உள்ள 'விஜயராகவப் பெருமாள்' சன்னதியை அடையலாம். உண்ணாழியில் 'விஜயராகவப்பெருமாள்'' அமர்ந்த நிலையில் அருகில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஜடாயுவிற்காக காட்சி கொடுத்த கோலம் கருங்கல்லில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் வைக்கப்பெற்றுள்ள விஜயராகவப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, போறகத்திப் பெருமாள், ஆண்டாள் ஆகிய உற்சவ மூர்த்திகள் செப்புத் திருமேனிகளாக காட்சியளிக்கின்றன. இத்திருமேனிகள் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும்.

போறகத்திப் பெருமாள் செப்புத் திருமேனி மிகவும் அழகாக வடிக்கப்பெற்றுள்ளது. சதுரபீடத்தின் மீது உள்ள பத்மபீடத்தில் நின்ற நிலை, இடது முன்கையை கதையின் மீது ஊன்றியும், இடது பின்கையில் சங்கும், வலது முன்கை அபயமுத்திரையும், வலது பின்கையில் சக்கரத்தை ஏந்திய நிலை, மார்பில் புரி நூல் மூன்று பிரிவாகப் பிரிந்து செல்கிறது. வலது பக்க மார்பில் 'திருமரு'. கழுத்தில் அணி. காதுகளில் மகர குண்டலங்கள், கிரீடமகுடம், தலையின் பின்பக்கம் சிரசக்கரம் காட்டப்பெற்றுள்ளது. பாதங்களில் பாதச் சங்கிலி, கணுக்காலில்இருந்து இடுப்பு வரை ஆடை, ஆடையின் மீது 'கீர்த்தி முகக் கச்சு'.

உண்ணாழியின் மீது அமைந்துள்ள விமானம் ''நாகரவிமானமாகும்'' நான்கு பட்டைகளை உடையது. இதன் மீது கலசம் அமைந்துள்ளது.

கோயிலை வலம் வருகின்ற வழியாக சென்றால் திருச்சுற்றின் தென் மேற்கு மூலையில் ஆண்டாள் சன்னதி உள்ளது. இதன் அருகில் தென் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் தென் கிழக்கு மூலையில் தென்பக்கத் திருச்சுற்று சுவற்றில் யாதவப்பிரகாசரும், இராமனுஜரும் (உடையவர்) சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளனர். யாதவப்பிரகாசர்என்பவர் திருப்புட்குழியில் வாழ்ந்த சித்தாந்தியாவார். இவரிடத்தில் உடையவர் பெரிதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். உடையவர் தன்னுடைய ஊரான திருப்பெரும்புதூரில் இருந்து திருப்புட்குழி வந்து அவரிடம் சீடராக இருந்திருக்கிறார். யாதவப் பிரகாசர் அமர்ந்த நிலையில், அருகில் உடையவர் நின்ற நிலையில், பிரகாசரை வணங்கும் நிலையில் சிற்பம் செதுக்கப்பெற்றுள்ளது.

ஆண்டாள் சன்னதிக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள வாகன மண்டபத்தில் சிம்மவாகனம், யானை வாகனம், கருடவாகனம், சர்ப்பவாகனம், கிளி வாகனம், ஆஞ்சநேயர் வாகனம் ஆகியவை உள்ளன. இவற்றுள் சிம்ம வாகனம் மிகவும் அழகாக உள்ளது. வாகனங்கள் பிற்காலத்தில் செய்யப் பெற்றதாக இருந்தாலும் அழகு வாய்ந்தவை.

இதனை அடுத்து வடக்கு பக்கத்துத் திருச்சுற்றில் மரகதவல்லி தாயார் சன்னதி உள்ளது. கிழக்குப் பார்த்து உள்ள இந்த சன்னதியில் முன் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்றால் மரகதவல்லி தாயார் அமர்ந்துள்ள திருக்கோலத்தை காணலாம்.

அம்மையின் சிறப்பினை பெரியதிருமடல்

''மாமலர்மேல்
அன்னம்துயிலுமணி நீர் வயலாலி,
என்னுடைய விண்ணமுதை வெவ்வுள் பெருமலை
கன்னிமதில் சூழ் கணமங்கைக் கற்பகத்தை [யை,
மின்னையிரு சுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்
பொன்னை, மரதகத்தைப் புட்குழியெம்
போரேற்றை
மன்னுமரங்கத்தெம் மாமணியை''

என்று குறிக்கிறது. அம்மன் சன்னதி மண்டபத்தின் தென் கிழக்கு மூலையில் (வெளிப்பக்கம்) தென் பக்கஅடிப்பகுதியில், மண்டபம் கட்டப்பெற்றதற்கு பயன்படுத்தப்பெற்ற அளவுகோல் ''கண்டரகண்டன்கோல்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

விஜயராகவப் பெருமாள் கோயிலின் வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்கு இங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பெரிதும் உதவி புரிகின்றன. கால அடிப்படையில் பார்க்கும்பொழுது 'சடையவர்மன் சுந்தர பாண்டியன்' கல்வெட்டே காலத்தால் முந்தியதாகும். இவன் மீது பாடப்பட்ட ஒரு வாழ்த்துப்பா கல்வெட்டாக இங்கே பொறிக்கப்பட்டுள்ளது.

''வாழ்க கோயில் பொன் வேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னவனே''.

சுந்தர பாண்டியன் சில ஆழ்வார்களை இக்கோயிலில் பிரதிட்டை செய்திருக்கிறான். இவர்களுக்குத் திருவாராதனை குறைவற நடைபெறுவதற்காக ஒரு கிராமத்தையும் அளித்திருக்கிறான்.

விஜயநகர ஆட்சியில் பெருமாள், இளைய பெருமாள், நாச்சியார், திருமங்கையாழ்வார், சேனைமுதலியார், நித்ய விநோதச்செல்வர், வாழவந்த பெருமாள் ஆகியோரின் செப்புத் திருமேனிகள் பிரதிட்டை செய்யப்பட்டனவாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

இதனை அடுத்து தெலுங்குச் சோழர்கள் கல்வெட்டே மிகுதியாக பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் விஜய கண்ட கோபால தேவர், வீர கண்டகோபால தேவர் கல்வெட்டுகள் குறிப்பிடத்தகுந்தவைகளாகும்.

# சுந்தரர் அருளிய திருத்தொண்டர் திருத்தொகை

''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும்அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக் கடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே''

''இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல்மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே''

''மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தெர்ண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே''

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி யடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிகம்பன் கலியன்
கழற்சத்தி விரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

கறைகண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் ஜோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைகொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியர்ர்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடிய்யேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும்அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பர் ஆவாரே''

இறையடியார்களை எல்லாம் கதம்ப மாலை போல் வேற்றுமையின்றி ஒரு சேரத் தொடுத்தும் தொகுத்தும் பாடியிருப்பதை இதில் காண்கிறோம். ஆகவே சிவனடியார்கள் எல்லோரும் வேற்றுமையிலராய் சிவபெருமானுக்கே பணி செய்து அவன் பதம் அடைந்த பெருமையில் சிறந்த சீலராதலை எண்ணி இவர்களைத் தொண்டர் குலத்தினர் எனப் போற்றுவதும், நாமும் தொண்டர்குலத்தினராய்ச்சேர்தலுமே சேக்கிழார் திருத் தொண்டர் புராணம் வாயிலாக ஞாலத்திற்கு அறிவுறுத்திய ஒப்பரும் செய்தியாகும்.

— — — —

# உண்மையால் உயர்ந்த உத்தமர்

## (அரிச்சந்திரன் வரலாறு)

**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

பண்டைய காலத்திலிருந்து இன்று ''வாய்மையே வெல்லும்'' என்ற நம் அரசாங்கத்தின் கொள்கைவரை யாவருமே உண்மையை மதித்தனர். இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த மகாத்மா காந்தி அடிகள் அவர்களின் கொள்கையும் சத்தியமும் அகிம்சையும் என்பது உலகமறிந்த ஒன்றாகும். மனத்தின் தூய்மை என்பதை உண்மை என்றும், வாயால் தூய்மையான சொற்களைப் பேசுவது வாய்மை என்றும் உடலால் தூய்மையாயிருப்பதை மெய்மை என்றும் நம் ஆன்றோர் கூறினர். மனம் வாக்கு காயம் மூவகையிலும் ஒழுக்கத்துடன் வாழ்ந்த நல்லோன் அயோத்திக்கு அரசனான அரிச்சந்திரன்; நம் நாட்டின் உயர்ந்த வழி காட்டி இந்த நல்லோன்.

வரையாது கொடுக்கும் வள்ளலான சிபிசக்கரவர்த்தி போன்றவர் ஆண்ட அயோத்தியில் எங்கு பார்த்தாலும் கொடிகள் ஆடிக் கொண்டிருந்தன. எங்கள் நாட்டிலே நல்லன எல்லாம் நிரம்பியுள்ளன வந்து காணுங்கள் என அழைப்பதுபோன்றிருந்தது. இத்தகைய நாட்டை அரசு செய்த அரிச்சந்திரனது நெற்றியில் சிவனடியார்களை வணங்கியவடுவும் சிற்றரசர்கள் தம் மகுடங்களை வைத்து வணங்கியதால் காலில் வடுவும் இருந்தது என்கிறார்.

துடிப்படு கரத்தன் அடியர்தொழுது நீற்று
பொடிப்பட வடுப்படு கறுப்பு நுதல் பொங்க
முடித்தலை உறத்திசை முகத்தரசர் உய்த்த
வடுப்படு கறுப்பிரு மலர்க்கழல் வணங்க

இத்தகைய அரிச்சந்திரன் சபையை அனேக முனிவர்கள் வந்தடைந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்று தன் சபையில் இருக்கச் செய்த அரிச்சந்திரன் ''முனிவர் பெருமக்களே! எந்தெந்த நாடுகளுக்குச் சென்றீர்கள்! எந்தத் திசைகளெல்லாம் போனீர்கள்! எந்தெந்தப் புனித நீர்களில் ஆடினீர்கள்? ஏதாவது புதுமையான செய்திகள் உண்டா?'' எனக் கேட்க, ''அரசனே! கன்னோசி நாடு சென்றோம். கண்டகி நதியில் நீராடி வருகிறோம். கன்னோசியைச் சந்திரதயன் எனும் அரசன் ஆட்சி புரிகிறான், அவனது மகள் சந்திரமதி. பூ உலகம் தேவருலகம் இவற்றிலும் காண இயலாத அழகு பொருந்திய அப்பெண் ஒழுக்கத்தின் உறைவிடமான அருந்ததியைக் காட்டிலும் உயர்வுடையவளாக விளங்குகிறாள். குழல், வீணை குயில், கிளி, மழலை இத்துணை ஓசைகளின் இனிமையையும் சேர்த்து பரமன் சந்திரமதியின் குரலை உண்டாக்கியுள்ளான் போலும்! என்றெல்லாம் முனிவர்கள்கூற, சந்திரமதியைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமுடையனானான் அரிச்சந்திரன். பெண்கேட்பதற்காகமுனிவர்களே சந்திரதயனது நாட்டுக்குச் சென்றனர். பார்வதியைத் திருமணம் முடிக்கச் சிவபெருமானது சார்பில் மலையரசனிடம் சப்தரிஷிகள் சென்ற மாதிரியான செய்கை. பழைய காலத்தில் நல்ல எண்ணங்களையுடைய முனிவர்பெருமக்களே தக்க ஆண் பெண்களைத் திருமணமுடிக்க உதவினர் போலும்! நல்லவர்களின் செய்கைகள் நன்மையில் தானே முடியும்! முனிவர் கன்னோசி நகரம் சென்று சந்திரதயனிடம் அரிச்சந்திரனைப் பற்றிக்கூறி ''சந்திரமதிக்கு ஏற்ற கணவன் அவனே'' என்றனர். ''சிவபெருமான் அருளிய தெய்வரகசியம் ஒன்று உண்டு. அதை அறியவல்லவருக்கே சந்திரமதி மனைவியாவாள். அரிச்சந்திரனை இங்குவரச் சொல்லுங்கள்'' என்றான் சந்திரதயன்.

மூவராயவரின் முன்னா மூர்த்தியார் அருளிச்
செய்த
தேவரகசியம் ஒன்றுஉண்டாம்! அன்னது தெரிய
வல்லார்
யாவராயினும் யான்பெற்ற இளங்கொடி தனக்குக்
கேள்வர்
ஆவரால்; அவனிங்கெய்தின் அறியலாம் அழையும்
என்றான்.

அரிச்சந்திரன் அயோத்தி விட்டுப் புறப்பட்டு வரும் வழியில் ஒரு பாலைவனம் இருந்தது. சிவபெருமான் திரிபுரத்தை எரித்த நெருப்பும், மன்மதனை எரித்தநெருப்பும் கடலுக்குள் உள்ள வடவாமுகாக்கினி என்ற நெருப்பும் ஒனறாயிருந்த மாதிரி வெப்ப முடையதாயிருந்தது அப்பாலைவனம். அப்படிப்பட்ட பாலைவனத்தில் காளிதேவி ஓரிடத்தில் சிம்மாதனத்தில் வீற்றிருந்தாள். அங்கு குதிரைப்பூட்டப்பட்டதேர், வில் அம்பு முதலானவை கல்லாயிருந்தன. அந்தப்பாலைவனத்தையடைந்து அரிச்சந்திரன் அவற்றை நோக்க அவை பொன்னாலாகிய தேராகவும், பொன்வில் அம்புகளாகவும் பொன்னிறமான குதிரைகளாகவும் மாறின. அரிச்சந்திரன் அம்மையை வணங்கி''இது என்ன? இவை திடீரெனத் தங்கமயமாகிவிட்டன?'' எனக் கேட்க ''வருணன் இந்தப் பொன் தேரைக் கல் தேராக்கி, எவர் இதை நோக்கும் போது பொன் தேராக மாறுகிறதோ இதை அவருக்களித்து விடு என்றான். உன் நோக்கம்பட்டதும் இது பொன் தேராகி விட்டது. இது உனக்கேயாகும்'' எனக் கூற அரிச்சந்திரன் அந்தப் பொன் தேரின் மீதேறிக் கன்னோசியை அடைந்தான்.

மன்னாகேள்! என்னுடைய மணிவாயில்தனில்
வருணன் வைத்துப்போன
அந்நாள் தொட்டு இந்நெடுநாள் அளவாகக்
கல்லாய்; நின் அருட்கண்நோக்கப்
பொன்னான செழுந்தேர் நீ கொடுபோ
என்றினிது அளிக்கப் புகழயோத்தி
நன்னாடன் தான் வாங்கி நவமணித்
தேரதிலேறி நடத்தினானே

கன்னோசி அடைந்த அரிச்சந்திரனைச் சந்திரதயன் எதிர்கொண்டழைத்தான். ''தெய்வரகசியத்தை அறிந்து என் மகளை மணந்து இவன் என் மருமகனாக வேண்டும்'' என ஏங்கி வேண்டினான். தோழி ஒருத்தி சந்திரமதியிடம் சென்று அரிச்சந்திரனைப் பற்றிக் கூற அவளும் அரிச்சந்திரனை



எண்ணி ஏங்கலாயினள். சந்திரமதிக்கு சுயம்வரம் என அறிவிக்கப்பட்டது. கூட்டம் கூட்டமாக அரசர் முதலானவர் வரலாயினர்.

வேந்தர் ஈண்டினர்; வேதியர் ஈண்டினர்;
மாந்தர் ஈண்டினர்; மங்கையர் ஈண்டினர்;
ஆய்ந்த நீதி அமைச்சரும் அவ்வவர்ச்
சேர்ந்த சேனையும் சேரவந் தீண்டின

சுயம்வர மண்டபத்திற்கு வந்தான் அரிச்சந்திரன். சந்திரமதியின் திருக்கழுத்தில் திருமாங்கலியம்இருப்பதைக் கண்டனன். திடுக்கிட்டான். ''கன்னி என எண்ணினேன். கழுத்தில் தாலியணிந்த இவள் எங்ஙனம் கன்னியாய் இருக்க முடியும்? இன்னொருவன் இவளை எப்படி மணந்து கொள்ள முடியும்?'' என எண்ணி சந்திரதயனைப் பார்த்து '' முன்னரே தாலியணிந்து கொண்ட பெண்ணை இரண்டாவதாக மணம் முடிப்பதா? நல்லோர் செய்யக் கூடிய் செய்கை இல்லையே? உலகில் இதுவரை இல்லாத புதுமையாக இது தோன்றுகின்றதே! என்றான்.

பொறுத்து முன் மங்கலம்பூண்ட பேதையை
மறுத்து இரண்டாவது மணமுடிப்பரோ?
சிறுத்தவர் செய்தொழில் திரைவரைப்பிதின்
நிறுத்தினீர் நீரெனா நெடிது கூறினான்.

சந்திரதயன் மனத்தினுள் களிப்புடன்''அரசர்களே! இம்மன்னவன் கூறியது உண்மையா? உங்களுக்கு இந்தப்பெண்ணின் கழுத்தில் தாலியிருப்பது தெரிகின்றதா?''எனக் கேட்க மற்ற அரசர்கள் கை கொட்டிச் சிரித்து 'இந்தப் பெண்ணின் கழுத்தில் தாலியில்லை. அரிச்சந்திரன் பொய் கூறுகின்றான்' என்றனர்.

சந்திரதயன் ''அரசர்பெருமக்களே! ஹரிச்சந்திர மகாராஜன் இப்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கண்டதற்கும் உங்கள் கண்களுக்கு அதுபுலப்படாமல் இருப்பதற்கும் காரணமுண்டு. சிவபெருமான் எனக்கு ஒரு வரமளித்தான். இந்தச் சந்திரமதி தன்கழுத்தில்ஒரு தாலியுடனே பிறந்துள்ளாள். இவள் கழுத்தில் உள்ள தாலியை எவன் காண்கிறானோ அவன் தான் இவளுக்குநாயகன் என்றனர். எனவே சந்திரமதி அரிச்சந்திரனுக்கே உரியவள்.'' என்றான். 'அதே நேரத்தில் சந்திரமதி ''நான் அரிச்சந்திர மகாராஜனையே மனதில் வரித்தேன். எனவே இம்மாலை அவர் கழுத்தில் சென்று விழட்டும்'' என்று தன் கையிலிருந்த மாலையை எறிய, அது அரிச்சந்திரன் கழுத்தில் விழுந்தது.

வார்பயில் பூண்முலை மாலையும் நெஞ்சம்
பார்பயில் மன்னவர் பற்பலர் கண்ணும்
தார்பயில் வேலரிச் சந்திரன் என்பான்
மார்பிலணைந்து மலர்ந்தன மன்னோ

அரிச்சந்திரன் சந்திரமதியைத் திருமணம் புரிந்து கொண்டு அயோத்தி திரும்பி இன்புற்று வாழ்ந்தனன். சந்திரமதி தேவதாசன் என்ற மகனைப் பெற்றாள்.

கன்னிப் பெண்ணானவள் கழுத்தில் மங்கிலியம் அணிந்த பின் சுமங்கலி என மங்களகரமான பெயரை அடைகிறாள். பிறக்கும் போதே திருமங்கிலியத்துடன் பிறந்த தெய்வீகமான சந்திரமதியின் பெருமையையும் அவளை மணந்த அரிச்சந்திரனின் பெருமையையும் எவ்வாறு கூறுவது? யாவும் இறைவனருளே!

(தொடரும்)

நூல் அறிமுகம்

# இந்துமத இணைப்பு விளக்கம்

## வினா – விடைத் துணைவன்

நூல் வெளியீடு: பு. மா. ஜயசெந்தில்நாதன்
இந்துசமய மன்றம்
ஸ்ரீ சங்கரமடம்,
காஞ்சிபுரம்-631502.
விலை: ரூ.8.00
பக்கங்கள்: 120.

தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் செயல் அலுவலர்கள் பணிக்காகத் தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக்குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்வோர் படித்துப்பயன் அடைவதற்காக இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்துமதம், இந்துமத நூல்கள், இந்துமத உட்பிரிவுகள், உலகத்தோற்றம், முத்திமார்க்கங் கள், ஆலயவழிபாடு, திருவிழாக்கள், அடியார்கள் முதலான 30 பொருள்களைப் பற்றிய 248 வினா-விடைகள் இந்நூலில் இடம்பெற்று கற்பார் ஆர்வத்தைத் தூண்டும்வகையில் மிக எளிமையான நடையில் விளக்கப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாக அதிகாரிகளும், நிர்வாக அதி காரிக்குரிய தேர்வு எழுதுவோர்களும் மட்டுமே படிக்க வேண்டிய நூல் அல்ல; இது இந்துசமயத் தின் அருமை பெருமைகளை அறிய விரும்பும் அனைவரும் படிக்கத்தக்க நூலாகும். இந் நூலில் இடம் பெற்றுள்ள சில வினா விடைபகுதி கள் இங்கே சான்றிற்காகக் காட்டப்படுகின்றன.

சைவ சமயச் சின்னங்கள் எவை?

திருநீறு உருத்திராக்கம், பஞ்சாட்சரம் ஆகிய மூன்றும் சிவ சின்னங்கள் எனப்படும்.

வைணவ சமயச் சின்னங்கள் எவை?

திருமண்காப்பு, துளசி மணிமாலை, அஷ்டாட் சரம் ஆகியவை வைணவச் சின்னங்களாகும்.

உருத்திராக்கம் என்பது யாது? அதை அணியும் முறையையும், அணிவதால் உண்டாகும் நன்மை களையும் விளக்கமாக எழுதுக;

இறைவனின் (ருத்திரனின்) முக்கண்களி லிருந்துதோன்றியதே ருத்ராட்சம். இதற்கு உருத் திராக்கம், திருஅக்கமணி, திருக்கண்மணி என்றெல் லாம் பெயர்கள் உண்டு. இதை அணிவதால் எவ் விதத் தீங்கும் வந்து அடையாது. இது இறைவனின் அடையாளமாகத் திகழ்வது. இதில் ஒரு முகம் முதல் பதினாறு முகம் வரையிலுள்ள ருத்ராக்க மணிகள் உள்ளன. மார்பில் அணிவோர் 108,54,27 என்ற எண்ணிக்கையில் ருத்ராக்கங்களை மாலை யாகக் கட்டி அணிந்து கொள்ளலாம். இதை உரைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாவதாக மருத்துவம் கூறுகிறது. உருத்திராக்கம் வழி உடலில் பாயும் நீர் புனித மானது. இதையணிந்து கொள்பவர்களுக்கு எவ்வித உபாதைகளும் தீங்குகளும் வந்து சேரமாட்டா.

சந்தனத்தின் சிறப்பு யாது?

உடலின் வெப்பத்னதப் போக்கிக் குளிர்ச்சி யைத் தரவல்லது சந்தனமாகும். இது மிக்க மண முடையது. பல நரம்புகள் ஒன்று கூடும் புருவ மத்தியில் இடும் சந்தனம் வெப்பத்தைப்போக் கிப் புத்துணர்ச்சியைத் தரவல்லது.

திருமண்காப்பின் பெருமையை எழுது

'நாமம்' என்பதுவே 'திருமண் காப்பு' எனப் படுகிறது. இது ஒரு வகை மண், திருநாராயண புரத்தில் கிடைக்கிறது. இதை, திருமாலடியார்கள் இறைவனின் சாயலாக அணிந்து கொள்ளுகிறார் கள். இதன்மத்தியில் லட்சுமியின் அருட்சாயலாக செந்தூரம் அணிந்து கொள்கிறார்கள். தென்கலை சம்பிரதாயத்தில் திருமாலின் திருவடிகளேயே சூடிக்கொள்ளும் பாவனையாக இதன்கீழ் பாதத் தைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

விக்கிரகத்தின் சிறப்பை எழுது

இறை மூர்த்திகளின் உருவத்திருமேனிகளே விக்ரகங்கள் எனப்படுகின்றன. இவையே வழிபடும் நமக்கு அருளைச் சொரிந்து வாழ வைக்கின்றது. இறையருள் சுரந்து வெளிப்படும் வழியாகத் திகழ் வன விக்ரகங்களே.

'சுயம்பு' என்பது யாது?

பிறரால் உண்டாக்கப்படாமல் தாமே தோன் றிய மூர்த்தமே சுயம்பு எனப்படும்.

தேவப் பிரதிட்டை என்று எதற்குப் பெயர்?

தேவர்கள், ரிஷிகள் முதலியோர்களால் பிர திட்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கங்களே தேவப் பிரதிட்டை எனப்படும்.


பஞ்சாங்க நமஸ்காரம் என்றால் என்ன?

தலை, இரு கைகள், இரு முழந்தாள்கள் ஆகிய ஐந்து அங்கங்களும் பூமியில் படுமாறு வீழ்ந்து வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரம் ஆகும். பெண்கள் இவ்வகை நமஸ்காரம் செய்வதற்கு உரியவர்.

அஷ்டாங்க (அட்டாங்க) நமஸ்காரம் என்றால் என்ன?

இவ்வகை நமஸ்காரம் ஆண்களுக்கே உரியது தலை, இரு கைகள், இரு காதுகள், இரு முழந்தாள் மார்பு ஆகிய எட்டு அங்கங்களும் நிலத்தில் படு மாறு வீழ்ந்து வணங்குவது அட்டாங்க நமஸ்கார மாகும்.

—நிறைமதி



# கம்பரின் இராமாவதாரம்

**டாக்டர் த. அமிர்தலிங்கம்**

– 10 –

வசிட்டர் இராமருக்கு உயரிய உபதேசங்களைக் கூறி அரங்கநாதர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு இராமருக்குப் பட்டாபிசேகச் சடங்குகளையும் செய்கிறார். வேத மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட புண்ணிய தீர்த்தத்தால் இராமரை நன்னீராட்டி ''இனி உபவாசம் இருக்க வேண்டும்'' என்று கூறி இராமரைத் தர்ப்பாசனம் மேல் அமரவைக்கிறார்.

தசரதரின் அரண்மனைக்குத் தனியே திரும்பி வரும் வசிட்டர் இராமரின் பட்டாபிசேகச் சடங்குகள் யாவும் நிறைவேறியதைத் தெரிவித்த பிறகே தசரதர் வள்ளுவர்களை வரவழைக்கிறார். இராமர் பட்டாபிசேகச் செய்தியை மக்களுக்கு அறிவித்து நகரை அலங்கரிக்க உத்தரவிடுகிறார்.

''ஏவிய வள்ளுவர் இராமன் நாளையே
பூமகள் கொழுநனாய் புனையும் மோலிஇக்
கோநகர் அணிகெனக் கொட்டும் பேரிகை
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினார்''

இராமரின் பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்பதும் மக்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தேவாமிர்தத்தை அருந்தியவர்கள் போல் அவர்கள் ஆடுகிறார்கள் பாடுகிறார்கள். பொருளையும் பொன்னாபரணங்களையும் தெருக்களில் வாரி இறைத்துத் தங்கள் பேரானந்தத்தைப் புலப்படுத்துகிறார்கள். ''அயோத்தி அல்ல இது' பொன் அமராவதி'' என்று தோன்றுமாறு வண்ணக் கொடிகளை ஏற்றியும், வாழை கமுக மரங்களைக் கட்டியும், ஒளிவிடும் முத்துமாலைகளையும், மகர தோரணங்களையும் தொங்கவிட்டும் நகரை ஆர்வத்தோடு அலங்கரிக்கிறார்கள்.


அயோத்தி மக்களைப் போலவே தேவர்களும் கூட இராமர் பட்டாபிஷேகத்தைக் கேட்டுப் பேரானந்தம் அடைகிறார்கள். மேல் நிகழும் நிகழ்ச்சிகளைக் காணும் ஆவலுடன் அவர்களும் அயோத்தியில் வந்து குழுமுகிறார்கள். முத்துக்களாலும், மணிகளாலும் அலங்கரிக்கப்பட்டுப் பேரழகுடனும், பெரும் பொலிவுடனும் திகழும் அயோத்தியைத் தம் அமராவதியாகவே மயங்கி ''நாம் இன்னும் புறப்பட்ட அதே அமராவதியில் தான் இருக்கிறோமா?'' என்றும் அவர்கள் மனமயக்கம் கொள்கிறார்கள்.

இவ்வாறு வானவரும், ஏனையோரும் ஆட்டமும் பாட்டுமாக விழாக்கோலம் பூண்டிருக்கும் முன்னிரவு நேரத்தில்தான் இராவணனின் தீமையெலாம் ஒருவடிவாக உருவான கூனி வெளிப்பட்டு வருகிறாள் என்று வர்ணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இதுவெனப் பொலியும் எல்லையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்''

கைகேயியின் உயிர்த் தோழியான கொடுமனச் கூனி இராமருக்குப் பட்டாபிஷேகம் எனும் செய்தியை அறிந்து மிகக்கொதிப்படைகிறாள். அவளுடைய கண்கள் நெருப்பினைக் கக்க, முகமும் விகாரம் அடைகிறது. ஆடியும் பாடியும் ஆங்காங்கே மகிழ்ச்சியோடு நகரை அலங்கரிக்கின்ற மக்கள் மேலும் வெறுப்பினைக் கக்கியவாறு அவள் கைகேயியின் மாளிகை நோக்கி விரைந்துவருகிறாள். ''மண்ணுண்டை அடித்து என்னை அவமதித்த இராமனுக்கா பட்டாபிசேகம்? நான் விடமாட்டேன்'' என்று கறுவியவாறு விரைந்து வருகிறாள் மந்தரை எனும் இயற்பெயர் கொண்ட அக்கொடிய கூனி.

''தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்ண்ட உண்டதனைத்தன் உள்ளத்து உள்ளுவாள்''



இராமர், தன் இளையவயதில் வில்லிலே மண் உருண்டைகளை வைத்து விளையாட்டாக மந்தரையின் கூன்முதுகுமேல் எய்திருக்கிறார். மந்தரையின் கூனை நிமிர்த்தும் அருள்உணர்வோடு இராமர் மண்ணுருண்டைகளை எய்தார் என்று இதற்கு ஆழ்வார்கள் காரணமும் கூறுகிறார்கள். ''கூனே சிதைய உண்டை வில்திறத்திற் தெறித்தாய்'' என்பது நம்மாழ்வார் வாக்கு. மந்தரை தன்தோழிகளோடு நீர்க்குடம் சுமந்துவர, இராமர் மண் உருண்டைகளை அவள் கூன்முதுகுமேல் எய்தார். மந்தரை நீர்க்குடத்தைக் கீழே தவறவிட குடமும் உடைந்துபோக, இதனால் இராமர் மேல் துவேசமும் கோபமும் கொண்டாள் மந்தரை. இராமரின் இளைய வயதிலே நடைபெற்ற இந்தச் சிறு விளையாட்டு நிகழ்ச்சியைச் சற்றும் மறவாமல் இராமர் மேல் பகையுணர்வை வளர்த்து வந்திருக்கிறாள் மந்தரை. அம்மந்தரைதான் இராமர் பட்டாபிசேகத்தைக் கேள்விப்பட்டு மனம் பொறுமியவளாய் கைகேயியின் அரண்மனைக்குள் வேகவேகமாக நுழைகிறாள். உயர்ந்த ஒப்பற்ற ஒரு படுக்கையில் பவளக் கொடி போல படுத்திருக்கும் கைகேயியின் கால்களைத் தீண்டி அவளை எழுப்புகிறாள் தீய கோள் போல்பவளாம் கூனி.

கைகேயியின் செம்பொற் சீறடிகளைக் கைகளால் தீண்டி அவளைத் துயில் எழுப்பும் கூனி, கைகேயி கண் திறந்ததும், அவள் செவிகளில் தீயைக் கக்குவது போலவும் பேசுகிறாள். ''பற்ற வருகிறது பெருதுன்பம். தூக்கம் என்னடி தூக்கம்' என்றும் வசைபாடுகிறாள். மந்தரையின் பதற்றமான வார்த்தைகளைக் கேட்டும் கைகேயி சிறிதும் கலக்கம் கொள்ளாமல் ''நல்ல மக்களைப் பெற்றிருக்கும் எனக்கு அப்படியென்ன துன்பம்வந்துவிடும்'' என்று பொதுப்பட தன்மக்கள் நால்வரைச் சிறப்பித்தும், ''வேதம்போல நீதியில் நிகரற்ற இராமனை மகனாகப் பெற்றிருக்கும் எனக்கு எப்படியடி வரும் துயரம்?'' என்று இராமரைச் சிறப்பித்தும் எதிர் வினா தொடுக்கிறாள் கைகேயி.

கைகேயி இராமரை மாற்றாள் மகனாக ஒரு போதும் எண்ணியதே இல்லை. தன் மணிவயிற்றில் தான் சுமந்து பெற்ற மகனாகவே இராமரை அவள் எப்போதும் போற்றி வந்திருக்கிறாள். ஆகவே தான் ''பெருந்துன்பம் உன்னைப் பீடிக்க இருக்கிறது'' என்று மந்தரை அச்சப்படுத்தும் போதும் நன்மக்களைப் பெற்றவருக்குத் துன்பம் இல்லை ஆதலால் ''வேதமேயன இராமனைப் பயந்த (பெற்றெடுத்த) எற்கு இடருண்டோ?'' என்று வினவுகிறாள் கைகேயி.

இராமரிடம் அளத்தற்கரிய ஆழமான அன்பு பூண்டிருப்பவள் கைகேயி. அவ்வன்பைப் பாழ்படுத்தத் திட்டமிட்டும் பக்குவமாகப் பேசுகிறாள் மந்தரை. ''உன்வாழ்வு வீழ்ந்தது. செல்வம் அழிந்தது. உன் மாற்றாள் கோசலை தன் மதியினால் தான் வாழ்ந்து உன்னை வீழ்த்திவிட்டாள்'' என்று புதிர் வைத்துப்பேசுகிறாள் மந்தரை. அவள் புதிர்ப் பேச்சைப் புரிந்துகொள்ளாமல் கைகேயியும் ''மன்னர்களுக்கெல்லாம் மாமன்னன் கணவன்: சொல்லுதற்கரிய பெரும்புகழ் பெற்ற பரதன் மைந்தன், கோசலைக்கு ஏற்கனவே உள்ள வாழ்வு தானே இது! இப்போது வேறு என்ன புதிய வாழ்வு அவள் பெற்றுவிட்டாள்'' என்று வினவுகிறாள் கைகேயி.

''மன்னர் மன்னனேல் கணவன் மைந்தனேல்
பன்னரும பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என் இதன்மேல் அவட்கெய்தும் வாழ்வு?''

கம்பர் கைகேயின் வாக்கில் பரதனைக் கோசலை யின் மகனாகவே சுட்டியிருக்கும் நயம் இங்குக் காண்க.

தான்பெற்ற பரதனைக் கோசலையின் மக னாகவும், கோசலை பெறற இராமனைத் தன் மக னாகவும் எப்போதும் எண்ணி, இராமன் மீதே மிக அதிகமாக பாசத்தைக் கொட்டி வளர்த்து வந்திருக்கிறாள் கைகேயி. இந்தப் பாசவுணர்வு தான் ''இராமன் கோமுடிசூடுவேன் நாளை, கோசலை பெற்ற வாழ்வு இது' என்று மந்தரை கூறவும், மகிழ்ச்சியின் எல்லையைக் கைகேயி கண்டு ஒப்பற்ற தன் மணிமாலையை அவள் மந்த ரைக்குப் பரிசாக வழங்குவதற்கும் காரணம் ஆகி றது.

இத்தனைக்கும் மந்தரை இரா்மரைப பழித் துத் தூற்றிடும் வகையிலே தான் பட்டாபிசேகச் செய்தியைக் கூறுகிறாள்.

''ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை எனும்பெயர்தையலாள் படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை வாழ்வு இது''

''ஆண்மைப பண்புக்கே மாசுண்டாகும்படி ஒரு மங்கையைக் கொன்றவன் இராமன். பெண்ணிடம் வீரம் காட்டிய கோழையான இராமனுக்கு மன் னன் ஆகும் தகுதிஏது?'' என்று குதர்க்கமாகவே மந்தரை இராமர் பட்டாபிசேகச் செய்தியைக் கூறிடவும் கூட அவளுடைய வஞ்சக எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத தூயவளான கைகேயி, கோசலை எத்தகைய மகிழ்ச்சியை அடைவாளோ அத்தகைய மகிழ்ச்சியையே தானும் அடைகிறாள்.

''மாற்றம் அஃதுரை செய மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால்
வேற்றுமை யுற்றிலள்''

''அத்தகைய பாச உணர்வோடு தான் இராமன்முடி சூடுவன்'' என்று மந்தரை கூறக்கேட்டதும் உவ கையின் உச்சிக்கு போய ''சுடர்களுக்கெலாம் நாய கம்'' அனையதோர் மாலையையும பரிசாக வழங்கு கின்றாள்.

கைகேயி கொடுத்த மணிமாலையை வாங்கிடும் மந் தரை அதை ஆத்திரம் பொங்க வீசி எறிகிறாள். மணிமாலை விழும் பளிங்குதரைகூட பள்ளமாகி விடும்போதுதான் மந்தரையின் எண்ணமே புரி கிறது கைகேயிக்கு.

''தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீயுக
விழித்தனள் வைதனள் வெய்துயிர்த்தனள்
அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தைஅக் கொடிய கூனியே''

மந்தரை, கேகய நாட்டிலிருந்து கைகேயியின் துணைக்காகவே வந்த ஒரு தோழி. கைகேயியிடம் நீண்ட காலமாகப் பழகிவரும் நட்புரிமை காரண மாகவே அவள் இப்படி மிகுந்த உரிமையோடு நடந்துகொள்கிறாள். கைகேயியைப் ''பைத்தியக் காரி'' என்றும் பழிக்கிறாள். ''நீயும் உன்மகன் பரதனும் கோசலைக்குப் பணியாட்களாகித் துன் பப்படுங்கள். இராமனும் சீதையும உயர்ந்த சிங் காதனத்தில் அமர்ந்திருக்க, வெறுந்தரையில் பர தன் கைகட்டி நின்று ஏவல் செய்யட்டும். அதைக் காண்பதற்குப் பைத்தியக்காரி நீ வேண்டுமானால் மகிழலாம். நான் மாட்டேன்.

## வாசகர் எண்ணங்கள்

ஆணையாளர் திரு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர் கள் அப்பர் சுவாமிகளின் உழவாரப் பணியைச் சிறப்பித்து எழுதியிருந்த ''ஆளுடைய அரசு ஆற் றிய அற்புதங்கள்'' கட்டுரை மிகச்சிறப்பாக இருந் தது. நல்ல பக்தி உள்ளம் வாய்க்கப்பெற்ற ஆணை யாளர் அறநிலையத்துறைக்கு வாய்த்திருப்பதை உணர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.


—இரா.கணேசன்,
இரா.குமார், ஈரோடு.

திருக்கோயிலில் வரும் எல்லாக் கட்டுரைகளுமே மிகச் சிறப்பாக இருபபதால், குறிப்பிட்டு ஒரு கட்டுரையைப் பாராட்ட முடியவில்லை.

—சிதம்பர சூரியநாராயணன்
பெரியகுளம்

கோசலையைப் பார். அவள் எவ்வளவு புத்தி சாலித்தனமாகக் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விட்டாள். உன் வயிற்றில் வந்து பிறந்ததால் அல் லவா பரதனுக்கு இத்தனைச் சிறுமை. அயோத்தி மாமன்னர்கள் வரிசையில் ஒருவனாக முடிசூடிக் கொள்ள உரிமை பெறாத பரதன் இனி இருப்ப தினும் இறப்பதேமேல். இராமனுக்குப் பட்டம் கட்டவும், பரதனைப் பராரிஆக்கவும்திட்டமிட்டே தான் சக்கரவர்த்தி, பரதனைப் பாட்டனார் ஊருக்கு அனுப்பிவிட்டார். இந்தச் சூழ்ச்சி ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் அறிவற்ற நீ எனக்கு மாலை பரிசளிக்கிறாயா மாலை? அரசன் மகளாகப் பிறந்து அரசன்மகளாகவளர்ந்து,பேரரசனுக்குவாழ்க்கைப் பட்டுப் பேரரசியாகத் திகழும் நீ, இன்று நீயாகவே போய் துயரக்கடலில் வீழ்வதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?''

இவ்வாறெல்லாம் கைகேயியை இடித்தும் பழித்தும் பேசுகிறாள் மந்தரை. கைகேயியின் தூய உள்ளத்தில் நஞ்சு கலக்கவேண்டும்என்பதற்காகவே கைகேயியைத் தாழ்த்தியும், கோசலையை உயர்த்தியும் பேசுகிறாள். ''ஓ பரதா! நான் என்ன செய்வேனடா! உன் தந்தைதான் கொடியவன் என்றால் உன்தாயும் அல்லவா கொடியவளாக இருக்கிறாள். நான் என்ன செய்வேனடா! உனக் கென்ன கல்வி இல்லையா? வீரம் இல்லையா? இளமையில்லையா? இளமைக் கேற்ற அழ கில்லையா? குணமில்லையா? புல்லிடை உகுத்த அமுதம் போல் அவையாவும் வீணாகத்தான் வேண்டுமா?'' என்று அரற்றி அழவும் செய்கிறாள் மந்தரை.



## சபதம் மேற்கொள்ள வேண்டும்

அறநிலையத் துறையானது கடவுள் சம்பந்தப் பட்ட துறை. எனவே, அறநிலையத்துறை அலு வலர்கள் அனைவரும் கடமை உணர்வுடன் பணி யாற்ற சபதம் மேற்கொள்ள வேண்டும்.

கோயில் நிர்வாக வளர்ச்சிக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் அரசு செய்யும்.

—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்

**திருமிகு கே.பி. கந்தசாமி அவர்கள்**

''அரசர்இல் பிறந்துபின் அரசர்இல் வளர்ந்து
அரசர்இல் புகுந்து பேரரசி யானநீ
கரைசெயற்கு அருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசேயக் கேட்கிலை உணர்தியோ என்றாள்''
''கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய
புல்லிடை உகுத்தநல் அமுதம் போலுமால்''

என்று மந்தரை கூறிப் புலம்பும் போது தான் இராமர்பட்டாபிசேகத்தைப் பரதர் பட்டாபிசேக மாக மாற்றவிழையும் அவளது வஞ்ச எண்ணமும் கைகேயிக்குப் புரிகிறது. மந்தரையின் மந்த புத்தி யைப் புரிந்துகொண்டதும் நெருப்பில் நிற்பவள் போல் துடிக்கிறாள் தூய கைகேயி.

''மூத்த மைந்தனே முடிசூடி அரசாளுதல் மனுமுத லாக வந்த சூரியகுலத்தில் உள்ள மரபு. அவ்வரச மரபையா நீ மாற்றச் சொல்கிறாய்? தீயவளே! என் கண்முன் நிற்காதே! ஓடிப்போ. நீ கூறிய ஒவ் வாத வார்த்தைகளுக்காக உன் நாவினை நான் வாள்கொண்டு அரிந்திருக்கவேண்டும். பழகிய தோழி என அவ்வாறு செய்ய மனம்வரவில்லை. பரதனுக்கு நல்லவள் போல் பரிந்து பேசும் நீ பரதனுக்கும் நல்லவள் அல்ல, எனக்குமே நீ நல்ல வள் அல்ல; தருமத்தை எண்ண, உனக்குமே நீ நல்லவள் அல்ல. மாசுமனம் கொண்டவளே! தகாத உன் போதனையை இவ்வளவோடு நிறுத்திக் கொள். என்முன் நிற்காமல் ஓடிப்போ'' என்று மிகக் கடுமையாக மந்தரையைக் கடிந்து கொள் கிறாள் கைகேயி.

ஆனால் மந்தரையோ கைகேயியின் கோபம் கண்டு அஞ்சுவதும் இல்லை; அவளை விட்டு ஓடிப் போவதும் இல்லை. மாறாக கைகேயியின் பாதங் களில் விழுந்து வணங்கி ''நீ கோபித்தாலும நான் சொல்லுவதைச் சொல்லியே தீருவேன்'' என் கிறாள். காலைச் சுற்றிய பாமபு போல கைகேயியை நீங்கிடாமல மேலும் பல துர்போதனை களைச் செய்கிறாள். ''இராமனுக்குப் பட்டம் கட்டிவிட்டால் உன் நிலையும், உன்னைச் சார்ந்த வர் நிலையும் என்னவாகும் என்பதை ஒருநொடி யாவது எண்ணிப் பார்த்தாயா நீ? பெரும் பதவி களையும், பெருஞ்செல்வங்களையும் பெற்றால் நல்லவர்களும் மனம் மாறிவிடுவார்கள். அருளா ளர்களையும் கல்நெஞ்சர்கள் ஆக்குவது செல்வம். இராமன் முடிசூடிக்கொள்வானேயானால இந் நிலவுலகம் முழுதும் கோசலைக்குச் சொந்தம; உனக்குச் சொந்தமும் உரிமையும் ஆவது ஒன்றுமே இல்லை. கஷ்டமென்று, தீராத வறுமையென்று உன் சுற்றத்தார் உதவிகேட்டு உன்னை நாடி வந் தால், நீ அவர்களுக்கு உதவ, கோசலையைத் தேடிச் செல்லவேண்டும். கோசலை பார்த்து ஏதாவது உனக்குக் கொடுத்தால் உண்டு. இல்லை யென்றால் இல்லை.

தசரதர் மன்னராக இருப்பதால், இப்போது கேகய நாட்டிற்கு ஆபத்தொன்றும் இல்லை. உரிமை படைத்த அரசராகவே உன் தந்தையும் இருந்து வருகிறார். நாளை இராமன் மன்னனாகிவிட்டால் இராமனின் மாமன் சனகனே முதல் ஆளாக உன் தந்தைமீது போர் தொடுப்பான். அப்போது இராமன் தன் மாமனை ஆதரிப்பானா? அலலது உன் தந்தையை ஆதரிப்பானா? உன்னைப் பெற்ற வர்களுக்கும், மற்றமற்ற சுற்றத்தார்களுக்கும் கேடுண்டாக்கவா நீ பிறந்தாய்! அறிவற்றவளே! நீயும் அழிந்து, உன் சுற்றத்தாரையும் அழித்துக் கொடுமையான துயர்க்கடலில் விழுவதற்கு உனக்கு எப்படியடி மனம் வந்தது?''

(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002